
திருக்கோயில் நவம்பர் 1991 விலை ரூ. 3





மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் 'அஷ்டாஷ்ட சிவமூர்த்தங்கள்' நூல் வெளியீட்டு விழா சிறப்புற நடைபெற்றது. நம் அறநிலையத் துறை ஆணையாளர் **திருமிகு சுகவனேஷ்வர்,** ஐ.ஏ.எஸ்., அவர்கள் நூலாசிரியர் சிவாகமபூஷணம் டாக்டர் எஸ். விசுவநாத சிவாச்சாரியார் அவர்களுக்குத் திருக்கோயிலின் சார்பில் சன்மானம் ரூ. 501 வழங்குகிறார்கள். அறநிலையத் துறையின் முன்னாள் ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ்., ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு கு. சிதம்பரம் பி.ஏ., ஆகியோர் உடன் உள்ளனர். (விரிவான செய்தி இதழின் உட்புறம் தரப்பட்டுள்ளது)

முகப்பு:
திருவரங்கம்
அருள்மிகு அரங்கநாதர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

| மாலை 33 | திருவள்ளுவர் ஆண்டு 2022 பிரஜோற்பத்தி ஆண்டு கார்த்திகை நவம்பர் 1991 விலை ரூ. 3-00 | மணி : 11 |
|---|---|---|


## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.

முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்


அருளாளர்களின் அருள் உள்ளம்
— திருமந்திரச் செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

சிவபெருமானின் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள்
— அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு சுகவனேஷ்வர் ஐ.ஏ.எஸ்.

குரு யார்? —ஞானச்சேரி ஞானிகள்

கந்தவேள் கருணை —டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார்

பாண்டிநாட்டு வைணவத் திருத்தலங்கள்
— நித்திலக்கோ

சித்திரபாரதம் — செவ்வேள்

ஸ்ரீ நரசிம்மாவதாரம் — ஜெயஸ்ரீ மூகாம்பிகா

லிங்கபுராணம் — டாக்டர் இரா. நாகசாமி

கீதைக் குறள்கள்
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்.

கம்பரின் இராமாவதாரம்
— டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்


**தீபாவளி நல்வாழ்த்துக்கள்!!!**

"**திருக்கோயில்**" வாசகர்களுக்கு
எங்கள் மனம் நிறைந்த
'**தீபாவளி நல்வாழ்த்து**'
தெரிவித்துக் கொள்கிறோம்.

அருளாளர்களின்

# அருள் அனுபவம்



**திருமந்திரச்செம்மல்**
**டி.வி.வெங்கட்டராமன் ஐ.ஏ.எஸ்**

**திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600 009**

(6)



'திருமந்திரச் செம்மல்'
**திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.**

**திருமந்திரச் செம்மல் திருமிகு டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் 23.10.91 அன்று காலை 8 மணி முதல் 8.15 முடிய சென்னை வானொலி நிலையத்தில் ஆற்றிய சிறப்புரையே இக்கட்டுரையாகும். சுயநலமற்ற அன்புள்ளம் அருளுள்ளமாக முகிழ்த்து மலர்வதே நம் வாழ்வின் நோக்கமாக வேண்டும் என்பதை மிக அற்புதமாக விவரித்தார் நம் திருமந்திரச் செம்மல். பல லட்சக்கணக்கான வானொலி நேயர்கள் கேட்டு மகிழ்ந்த சிறப்புரையை திருக்கோயில் வாசகர்களுக்காக கட்டுரையாக வடித்துத்தருவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.**

திருமந்திரம் சைவப் பெருமக்கள் போற்றி வணங்கும் பன்னிரு திருமுறைகளில் பத்தாம் திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது. திருமந்திரத்தை அருளிச் செய்த திருமூல தேவநாயனார் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஓர் ஒப்பற்ற யோகியாவார். பல ஆண்டுகள் கயிலை மலைப் பகுதிகளில் வாழ்ந்து இறையனுபவம் பெற்று, தென்னாட்டிலுள்ள திருத்தலங்களைத் தரிசிக்க வருகை தந்த பொழுது, காவிரி ஆற்றங்கரையிலுள்ள சாத்தனூர் என்கிற கிராமத்தின் வழியே சென்று கொண்டிருந்த பொழுது, ஓர் மாலைப் பொழுதில் ஆடுமாடுகள் தங்களை மேய்த்து வந்த மூலன் என்கிற இடையன் இறந்து தரையில் கிடக்க, அவனுடைய உடலைச் சுற்றி நின்று கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த நிலையை திருமூல தேவ நாயனார் பார்த்தார். மனம் நெகிழ்ந்தார். பசுக்கள் மேய்ப்போன் மீது வைத்திருந்த அன்பினைக் கண்டு வியந்தார். மூலனைஉயிர்ப்பிக்கத் தீர்மானித்து, யோக சாதனையால் தன் உடலை விட்டு மூலனின் உடலில் பாய்ந்து மூலனை உயிர்ப்பித்தார். அன்று முதல் திருமூலர் ஆனார். 3,000 ஆண்டுகளும் அருகிலிருந்த அரச மரத்தடியின் கீழ் யோக நிலையில் அமர்ந்து தவம் புரிந்து, ஆண்டிற்கு ஒரு முறை உபதேசித்த மந்திரங்கள்தான் 3000 மந்திரங்களாக, திருமந்திரமணி மாலையாக இன்று நமக்கு ஒப்பற்ற ஆன்மீக சாதனை நூலாகக் கிடைத்துள்ளது.

திருவருளால் நமக்கு திருமந்திரம் கிடைத்துள்ளது. பசு இனங்கள் தம் அன்பினை மூலன் மீது சொரிந்தன. ஞானியார் உயிரினங்கள் அனைத்தின் மீதும்தான் பெற்றிருந்த அன்பால் பரிவால், உயிர்கள் உய்ய வேண்டி திருமந்திர மாலையை அருளிச் செய்துள்ளார். எனவே, திருமந்திரம் அன்பினால் தோன்றியதென்றால் முற்றிலும் உண்மையாகும் இறைவன் உயிர்கள் மீது மழைபோல் பொழிவது திருவருள் ஆகும். உயிர்கள் தன்னலமற்ற அன்பினை பிறவுயிர்கள் மீது பொழிவது இறைவனுடையதிருவருளுக்குச் சமமாகும்.

இறைவனை செல்வத்தாலும் கல்வியாலும் அடைந்துவிட முடியாது. இவற்றினுக்குமேல்



பல படிகளுக்கு அப்பாலுள்ள அறிவு எனும் சாதனத்தாலும் இறைவனைத் தெரிந்து கொள்ள முடியாது. செல்வம், கல்வி, அறிவு என்கின்ற நிலைகளிலிருந்து இறைவனைக் காண முயலுபவர்கள் தோல்வி அடைவார்கள். செல்வமும் கல்வியும் ஆணவத்தை வலுப் படுத்துகின்றன: அகங்காரத்தை வளர்க்கின் றன; அறியாமைக்கு வித்திடுகின்றன. இவற் றின் வழியாக இறை உண்மையைப் பெற இயலாது.

இறைவனைப் பெற அவனுடைய திருவருள் தேவை. திருவருள் பெற்ற மாத்தி ரத்திலேயே மனதில் நிரம்பியுள்ள சிந்தனை களின் தன்மை மாறிவிடுகின்றது. இருள் நீங்கி ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மாபெரும் சோதியை அகக்கண்கள் பார்க்கத் தொடங்குகின்றன.

''அருளால் எவையும்பார் என்றான், அதை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்''

என்பார் தாயுமானவர்.

இறைவனின் அருளை முழுமையாகப் பெற்றவர் திருநாவுக்கரசர். இறைவன்அவரை பல துன்பங்களுக்கு ஆளாக்குகின்றான். திருநாவுக்கரசர் பரம்பொருளிடம் பற்றுக் கொண்டவராக, மாறாத குறிக்கோளுடன் நீங் காத அன்புடையவராக இருப்பதன் காரண மாக திருமாலும், நான்முகனும் காணாத சோதியை தம்முள்ளேயே கண்டுகொள்கின் றார்.

''தேடிக் கண்டு கொண்டேன்— திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை
என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்.''

என்று நாவுக்கரசர் தான் பெற்ற பேரின்பத்தில் மிகுந்த பெருமை கொள்கின்றார்.

காரைக்கால் அம்மையாரும் அதே நிலை யில் இருப்பவர். இறைவனுடைய அருளின் தன்மையை முற்றிலும் அறிந்தவர் அவர். அவ னுடைய அருளால் திருமாலும், நான்முகனும் காணாத ஒருவனைத்தான் கண்டு கொண்டதை நினைத்துநினைத்துப் பரவசப்படுகின்றார். பிற ருக்கு அரியதாக உள்ள ஒன்று தனக்கு எளி தாகக் கிடைத்து விட்டதே என்று எண்ணி வியப்படைகின்றார்;

''இன்று நமக்குஎளிதே; மாலுக்கும் நான்
முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை,-என்றும்ஓர்
மூவா மதியானை மூவே முலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு''
(அற்புதத் திருவந்தாதி)

அருளாளர்கள் இறைவனுடைய அருளை எளிதாகப் பெறக்கூடிய முழுமையான தகுதி பெற்றவர்கள். இறைவன் அள்ளித் தருவது அருள். அந்த அருள் இன்பத்திலே திளைப் பதே நம்முடைய கோட்பாடாக அமைய வேண்டும். அருள் நமக்கு வெறுமனே கிடைத்து

விடுமா? நாம் அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமா என்கிற கேள்விகள் எழலா மல்லவா? காரைக்கால் அம்மையார் இதை எண்ணிப் பார்க்கின்றார். தனது நெஞ்சை நோக்கிப் பேசுகின்றார். ''நெஞ்சே, இது வரை நீ அறியாமல் இருந்தாய், இன்று உனக்கு ஈசன் அருள் கிட்டி விட்டது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? நீ என்ன தவறு செய்திருந்தாலும் இறைவனிடம் உன்னுடைய அன்பைப் பெருக்கினாய். அவனுடைய அருளாகிய பெரும் சேமம், நன்மை, பாதுகாப்பு எல்லாம் உனக்குக் கிட்டிவிட்டது. ஆகவே, நீ பெருமகிழ்ச்சி பெற்ற நிலையில் இருக்கின்றாய். ஆனால், இத்துடன் போதும் என்று நிறுத்தி விடாதே. ஊரெல்லாம் பிச்சைக் கோலத்துடன் திரிந்து வருபவன் இறைவன். பிறர் தொடாத எலும்பினை மாலையாகக் கோர்த்து அணிந்து வருகின்றான். அவனை சாதாரணம் என்று நினைத்து விடாதே. அவன் மீது மேலும் மேலும் உனது அன்பைப் பெருகச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமாகத்தான் இறைவனுடைய அருளை நீ தொடர்ந்து பெறுவாய்'' என்று காரைக்கால் அம்மையார் தனது நெஞ்சத்திற்கு அறிவுரை கூறுகின்றார்:

''மகிழ்தி மடநெஞ்சே! மானிடரின் நீயும்
திகழ்தி; பெருஞ்சேமம் சேர்ந்தாய்;-இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க்
காட்பட்ட
பேரன்ப இன்னும் பெருக்கு''.
(அற்புதத் திருவந்தாதி)

இந்த அன்பைப் பற்றி நாம் சற்று சிந்திக்க வேண்டும். நாம் நமது குடும்பத்தில் உள்ளவர்களிடம் அன்பை வைக்கின்றோம். நமக்குத் தெரிந்தவர்களிடம் பாசத்தைக் கொட்டுகின்கின்றோம். மனைவி, மக்கள், நண்பர்கள் என்றவாறு கூறிக்கொண்டு அவர்களின் மீது உயிரையே வைத்திருக்கிறோமென்று பேசிக் கொள்கின்றோம். இந்த உணர்வினால் வரக்கூடிய அனுபவம் அன்பாகுமா? சற்று ஆழ்ந்து நோக்கினால் அது அன்பாகாது என்று புலப்படும். இந்த உறவிலே ஆசை இருக்கும். வேட்கை இருக்கும், நமக்குத் தெரியாமலேயே பிரதி பலன்களை எதிர்பார்க்கும் நோக்கமும் பொதிந்து கிடக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, தான் என்றும், தனது என்றும் வைத்துப் பார்க்கும் தன்மை இருக்கும். ஆகவே, சுயநலம் இருக்கும். 'மனிதர்கள் இச்சையுளே வைப்பர்'' என்கிறார் திருமூலர். புணர்ச்சிக் காலத்தில் இல்லாளுடன் ஒருவன் அன்பு கொண்டு உணர்ச்சி நிரம்பி இருக்கும் நிலை அன்பு என்று கூறப்பட்டாலும் அது சுயநலத்திலே தோன்றிய அன்பாகுமேயொழியஉண்மையான அன்பாகாது. உண்மையான அன்பில் தியாகம் இருக்கும். ஆசை இருக்காது. பலாபலன்களை எதிர்பார்க்கும் குறிக்கோள் இருக்காது. பயன கருதாமல் அன்பு செய்வதேஅப் பற்றதாகும். மனைவி, மக்கள், உறவினர், நண்பர்கள் மீது வைப்பது மட்டும் அன்பன்று, தன்னுடன் தொடர்பு இல்லாதவர்கள் மீதும் வைக்கும் அன்பே உண்மையான அன்பாகும். இந்த அன்பு தெய்வீகத் தன்மையுடையது. மனிதனை மனிதனாக்குவது. இத்தகைய அன்பு உயிர்களிடையே இயல்பாகவே இருக்கின்றது. ஆனால், மும்மலங்களாகிய திரை உண்மையை மறைக்கும்போது இந்த அன்பானது ஆசையாக மாறி விடுகின்றது. உண்மையில் எவ்வாறு அருள் இறைவனுடைய இயல்பாகின்றதோ, அவ்வாறே உயிருடைய இயல்பாக அன்பும் அமைந்துள்ளது. இதைத்தெரிந்து கொள்ளாதவர்கள் அன்புக் கண்களால் உலகினைப் பார்க்க மாட்டார்கள். இவர்கள் எலும்பின்மீது தோல் போர்த்தப்பட்ட உயிரற்ற, பயனற்ற, வெற்றுடம்பு மட்டுமே என்கிறார் திருவள்ளுவர்:

''அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு''.

உயிர்களிடையே தன்னலமற்ற அன்பு வைப்பது இறைவனுடைய அருளுக்குச் சமானமாகும். அத்தகைய அன்பு மனிதர்களை இறைவனுக்கு அருகிலேயே அழைத்துச் செல்லும். அன்பு வளர வளர, இறைத் தன்மையும் வளரும். இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு உடலையும், உடலால் பெறக்கூடிய அனுபவங்களையும், இன்ப துன்பங்களையும் அளிக்கின்றான். உயிர்களின் வினைக்கீடாக இறப்பையும், பிறப்பையும் அமைத்துக்கொடுத்துள்ளான். அவற்றை அனுபவிப்பது உயிர்களுடைய கடமையாக உள்ளது. அவை எப்படி இருந்தாலும் அன்பு வழியில் வாழ்க்கை அனுபவங்களைப் பெற்றும், ஏற்றும் தொழிலைச் செய்து வரக்கூடிய உயிர்கள் தங்களுடைய பிறவிப் பயனைப் பெறுவதற்கும் வழிகாட்டியாக அமைவது அன்பு ஒன்றேதான் என்கின்றார் திருமூலர். இறைவன் அன்புள்ளம் கொண்ட உயிர்களிடையேதான் புகுந்து கலந்து நின்று பிறவித் துன்பத்தை நீக்குகின்றான். இதைக் கோடிட்டுக் காட்டும் திருமந்திரம் பின் வருமாறு:—

''இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல என்னினும்
அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்பப் பிறவி முடிவது தானே''
(திருமந்திரம்......281)

இறைவனிடத்தில் வைக்கும் அன்பு எல்லாவற்றையும் விட மேலானது. ஆனால், இந்த அன்பும் தன்னலமற்றதாக இருக்க வேண்டும். மாசற்றதாகவும், தூய்மையானதாகவும், உண்மையானதாகவும் இருக்க வேண்டும். இத்தகைய அன்பு உயிர்கள் மீதெல்லாம்பொருந்தி இறைவனை நாடிச் செல்கின்றது. உலகத்தில் ஆசா பாசங்களின் அடிப்படையில் தோன்றும் அன்பானது ஐம்புலன்களின் சக்திக்கு கட்டுப்பட்டு இயங்குகின்றது. ஆசை வடிவிலே நிற்கின்றது. இறைவனின் மறைப்புச் சக்திக்கு உட்பட்டது. ஆனால் ஐம்பொறிகளின் தொடர்பு அறுபட்ட நிலையில் எழும் அன்பானது இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமானது. அத்தகைய அன்பு உள்ளத்தில் இறைவன் தனது திருவடியைப் பதிக்கின்றான். அவ

னுடைய அருட்சக்தி அந்த உள்ளத்தை ஏற்றுக் கொள்ளுகின்றது. அந்த அருட்சக்தியே அவ்வுள்ளத்தை ஒளிமயமாக்குகிறது. அதுவே அந்த உள்ளத்திற்கு பரம்பொருளையும் அடைவிக்கும். அவ்வுள்ளங்களில் சிவபெருமான் ''அன்பினில் விளையும் ஆரமுதாய்'' விளங்கி அருள் புரிவான்.

''அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கன்னியொடேற்க இசைந்தன
துன்புறு கன்னியைந் தாடுந் துடக்கற்று
நன்புறு சிந்தையை நாடுமின் நீரே''
(திருமந்திரம்...282)

அன்பை யாரிடம் வைப்பது? 'சிவப்பரம்பொருள் மீது வையுங்கள்' என்கிறார் திருமூலர். அவன் பொன்னினும் பிரகாசமானவன். செக்கர் மேனியன், அவனுடைய திருமேனி செக்கர் வானத்தைப் போலச் சிவந்திருக்கும். ''சிவனெனும் பெயர் தனக்கே உடைய செம்மேனி எம்மான்' என்கிறார் அப்பர் சுவாமிகள். உடலெலாம் திருநீறு பூசிக்கொண்டவன். செக்கர் வானாகிய செஞ்சடையிலே இறைவன் பிறையை அணிந்திருக்கின்றான். அது மிகவும் இளம்பிறை. ஆயினும், பளிச்சென்று பிரகாசிக்கின்றது. முதலில் பிறைக்கு இறைவன் தண்டனை வழங்கியிருந்தான். பின்னர் பெருங்கருணையுடன் பிறையைத் தனது சடையிலே சூடிக் கொண்டான். வெண்ணீறு சுடுகாட்டுப் பொடியாகும். எல்லாம் முடிந்த பிறகு எஞ்சி நிற்கும் ''அந்தம் ஆதி''யை சுட்டிக் காட்டுகின்றது. இந்த வெண்ணீற்று ஒளியில் விளங்கும் சிவபெருமானுடன் பிரியாது பின்னிக் கிடக்கும் அன்பே எல்லாவற்றிற்கும் மேலானதாகும். 'அத்தகைய சிவபிரானை நாடுங்கள், அவனிடம் அன்பை வையுங்கள். அவனருளைப் பெறுங்கள்' என்கிறார் திருமூலர்:

''பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே''
(திருமந்திரம்.....271)

இறைவனை அடைய பல வழிகள் உண்டென்போர் பெரியோர். இவை சரியை, கிரியை யோகம், ஞானம் என்று முறைப்படுத்தப்பட்டுள்ளது. திருமூலரே வேறொரு இடத்தில் ''தவமும், அறமும் மேற்றுணையாமே'' என்கின்றார். வாழ்க்கையிலே கடைபிடிக்க வேண்டிய அன்பும், அறமும் மனிதனைப் பக்குவப்படுத்துகின்றன. புலனடக்கம் செய்து மனதைக் கட்டுப்படுத்தி உடலால் அடையப் பெறும் இன்பங்களை குறைத்து அல்லது தவிர்த்து கடுமையான துறவறம் பூண்டு யோக சாதனை மூலமாகவே இறைவனை அடைதல் சாலச் சிறந்தது என்னும் கொள்கையுடையவர்கள் உண்டு. திருமூலர் அருளிச் செய்துள்ள திருமந்திரத்தில் முக்கியமான பகுதியான மூன்றாம் தந்திரம் யோக நெறிகளை விரிவாக எடுத்துச் சொல்லுகின்றது. திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் கடுமையான யோகம் புரிந்து வாழ்ந்த யோகியானதால் அட்டாங்க யோகம் என்கின்ற நெறிக்கு முக்கியமான இடத்தைத் தருகின்றார். அதே நேரத்தில் அவர் அன்பைப் புறக்கணிக்கவில்லை. அன்பு இன்றியமையாதது என்று சொல்லுகின்றார். கடுமையான தவம் செய்துதான் இறைவனை அடைய முடியும் என்பதல்ல. எலும்பை விறகாக்கும் வகையிலும், ஊனுடலை தவக்கனலில் வாட்டும் வகையிலும் இறைவனை நாடினாலும் அந்த முயற்சிக்கு அடிப்படையாக உள்ளத்திலே அன்பு இல்லையெனில் ஒரு பயனும் இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் விரும்புவது அன்பு. அந்த அன்பினால் இறைவன் தொண்டரை உருக்கவல்லவன். அன்பினால் உருகி உருகி மாணிக்கவாசகர் சிவமானார். இறைவனை அடைய அன்பில் உருகி அழ வேண்டும்; அரற்ற வேண்டும். இராப்பகல் இறைவனை பணிந்தேத்த வேண்டும். அகமுருகி இறை நினைவை நிரப்பி இறைவன்பால் தன்னை முழுதும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். ''நானும் அப்படிச் செய்துள்ளேன். அதை நீங்களும் செய்யுங்கள். என்போல நீங்களும் அன்பால் உருகி இறைவனை ஏற்றினால் ஞானத்தை அடையலாம். இல்லாவிட்டால் இறைவனை அடைய முடியாது'' என்கிறார் திருமூலர்:

''என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை யெய்தவொண் ணாதே''
(திருமந்திரம்......272)

''அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்
என்பும் உருவ இராப்பகல் ஏத்துவன்
என்பொன் மணியை இறைவனை ஈசனைத்
தின்பன் கடிப்பன் திருத்துவன் தானே''
(திருமந்திரம்....2980)

ஆதியும், அந்தமும் இல்லாதவன் இறைவன். சுயம்புவானவன். ஊழிதோர் ஊழி ஐந்தொழில்களை விடாது புரிந்து கொண்டு வருகின்றான். சிவபெருமான் கொன்றை மலரைச் சூடி இருக்கின்றான். அவனுக்கு அது மிகவும் பிடித்தமான மலர். தன்னுடைய அருளினால் தேனினும் மிக்க இன்பம் தரும் சக்தியை ஒரு பக்கத்தில் உடையவனாக இருக்கின்றான். அவனுடைய ஒளி பொன்னைப் போல இருக்கின்றது. ஆனால், இத்தகைய இறைவன் அடைய முடியாதவன் என்று ஐயுற வேண்டாம். அவனிடம் அன்பு வைப்பவர்கள் மீது அருள் மழை பொழிகின்றான். ''ஆர்வம் உடையவர் காண்பார் அறந்தன்னை'' என்கின்றார் திருமூலர். இறைவன் அவ்வாறு தன்னிடம் அன்பு செய்பவர்களுக்கு வேண்டியவற்றைத் தருகின்றான். ஏனென்றால், அவன் அன்பு வடிவமாக இருக்கின்றான். அவனிடம் யார் அன்பு கொள்கின்றார்களோ அவர்களிடம் நிலையாக நின்று கொண்டு அருள் பாலிக்கின்றான். அவர்களுக்கு வழித்துணையாகவும் இருக்கின்றான். ''தானொரு வண்ணம் என் அன்பில் நின்றானே'' என்கிறார் திருமூலர். இறைவனுடைய நினைப்பில் தங்களுடைய முழு சிந்தனையை வைப்பவர்களுக்குச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சோதியாகத் தோற்றமளிக்கின்றான்.

''அன்பினுள் ளான்புறத் தானுட லாயுள்ளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன
அன்பினுள் ளாகிஅமரும் அருள்பொருள்
அன்பினுள் ளார்க்கே அணைதுணை யாமே''
(திருமந்திரம்.........279)

இறைவன் பேரின்ப வடிவானவன். சீவர்களுடைய இன்பத்தில் பொருந்தி மகிழ்கின்ற அன்பு வடிவானவன். இராப்பகல் தன்னைப் பாசத்துள் வைத்துப் பரிவு செய்வார்களை நன்கு அறிவன். அவர்களிடையேவந்துஅவர்கள் உள்ளத்திலேயே உறைந்துகொள்வான். ஆனால் இதை யாரும் அறிந்து கொள்வதில்லையே! அவனை, விட்டுவிட்டு நினைப்பதில் பயனில்லை. கிடைப்பதற்கரிய ஒளி வடிவாகிய இறைவனைச்சிக்கெனப் பற்றிக்கொண்டு அவன் வழியே செல்ல வேண்டாமா? அவ்வாறு செல்வதன் மூலம் எல்லையில்லாப் பெருமையை அடைய வேண்டாமா? அவ்வாறு நீக்கமற நினைந்து அவனுடன் ஒன்றி இருப்பதேஇனிமையான நீராடல் ஆகுமல்லவா? இவ்வாறு தான் செய்தவாறு மற்றவரையும் ''இறைவனைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று அழைக்கின்றார் திருமூலர்:

''விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை
எட்டுமென் னாருயிராய் நின்ற ஈசனை
மட்டுக் கலப்பது மஞ்சன மாமே''
(திருமந்திரம் 289)

மாணிக்கவாசகர் இறைவனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டவர். தன் எண்ணங்களையெல்லாம் இறைவனிடம் அர்ப்பணித்து தன் கண்களை அழகிய திருவடிகளாகிய மலர்களுக்கு அடிமையாக்கி தனது வாக்கை இறைவனுடைய நாமத்திற்கு நிழலாக்கி மாணிக்கவாசகர் இறைவனைச் சிக்கெனப் பிடித்துக் கொள்கின்றார் ''அம்மையப்பன் ஓர் ஒப்பில்லாத மணி. அன்பினில் விளைந்த ஆரமுது. நானோ புழுவிற்கும் கீழானவன். அஞ்ஞானத்தில் மூழ்கி நிற்பவன். ஆயினும் இறைவன் எனக்கு சிவபதத்தை அளித்தான். செல்வன் சிவபெருமான் அவனைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு விட்டேன்'' என்கின்றார்:

''அம்மையே அப்பா ஒப்பு இலா மணியே
அன்பினில் விளைந்த ஆர் அமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்து அலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவ பதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே''
(திருவாசகம்)

இறைவனை ஒருவர் சிக்கெனப் பற்றிக் கொண்டால் அவர் வேண்டியவற்றையெல்லாம் இறைவன் வாரி வழங்குகின்றான். மும்மலங்களை அழிக்கின்றான். அருட்கண்ணை விழிப்பிக்கின்றான். அன்பர்களுடைய உள்ளத்தில் சிவ ஒளியைப் பெருகச் செய்வான்.

அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே''
(திருமந்திரம்....277)

இறைவனிடம் மக்கள் பலவிதங்களில் அன்பு வைக்கின்றனர். இம்மையிலும் மறுமையிலும் இறைவனருளால் பலவிதமான நன்மைகளைப் பெறுகின்றனர். ஆனால், உண்மையான அன்பர்கள் இறைவனிடமிருந்து இத்தகைய நன்மைகளை நாடுவதில்லை. அவற்றை அவர்கள் வெறுப்பார்கள். அன்பிலே ஊறி நிற்கின்ற அடியவர்கள். இறைவனிடமிருந்து ஒன்றுமே வேண்டுவதில்லை. அவர்கள் வீட்டுப் பேறினைக்கூட பெரிதாக நினைப்பதில்லை. முக்தி அடையவேண்டும் என்கின்ற ஆசையும் அவர்களிடம் இருப்பதில்லை. உலகில் மக்கள் பல பொருள்களைச் சேர்த்து வாழ வேண்டுமென்று விரும்புகின்றார்கள் ஆனால், இறைவனுடைய உண்மை அன்பர்கள் பொருட்செல்வத்தை நாடுவதில்லை. அதனால் கிடைக்கும் இன்பத்தை விரும்புவதில்லை. இன்பத்திற்குப் பிறகு துன்பமும் வரும் என்று அவர்கள் நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் இன்ப துன்பங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எல்லாவற்றையும் சமதிருஷ்டியோடு பார்ப்பார்கள். இவர்கள் வேண்டுவது இறைவனுடைய அன்பு. இறைவன் மீது அன்பு வைப்பதையே பேரின்பமாகக் கருதுவார்கள். இவர்கள் பற்றற்றவர்கள். இவர்கள் இறைவனை வேண்டி வணங்குவது உயர்ந்த அன்பின் அடிப்படையில்அமைகின்றது. சேக்கிழார் பெருமான் இத்தகைய திருத்தொண்டர்களின் அன்பினை வெகுவாகப் புகழ்ந்து பாடுகின்றார்:

''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்,
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்''
(பெரிய புராணம்-திருக்கூட்டச்சிறப்பு)

கண்ணப்ப நாயனார் திருக்காளத்தி மலையில் இறைவனைக் காணச் செல்கின்றார். உள்ளத்திலே ஒரு சொல்லொணா உவகை பொங்குகிறது. பாரம் நீங்குகிறது. அளவிலாத அவா பொங்கி, இறைவன் மீது பெரும் காதலாக மலர்கின்றது. பல பிறவிகள் எடுத்து இன்ப துன்பங்களை அனுபவித்து, வாழ்க்கை எனும் ஏணியில் உள்ள எல்லா படிகளையும் தாண்டி, இறைவனது மலையிலே கண்ணப்பனார் சேர்ந்தவராக, முன்னம் பாசத்தை விட்டவராக, அன்பே உருவமாக நின்ற பெருமையை சேக்கிழார் பெருமான், ''சார்பு விட்டகல நீங்கிப் பொங்கிய ஒளியின் நிழல் பொருவில் அன்பே உருவானார்'' என்றார். கண்ணப்பனார்அன்பு வடிவமானார். அன்பே அவர் உருவம் ஆயிற்று. அன்பேசிவம் ஆகையால் கண்ணப்பனார் இறைநிலையைப் பெற்றார். ஆகவே அவருடைய அறிவு முழுவதும் இறைவனையே அறிந்து நின்றது. வேறு ஒன்றினும் செல்லவில்லை. கண்ணப்பனாரின் செயல்களெல்லாம் இறைவனுக்கு இனிமை செய்தல் பொருட்டே ஆயின. இதனை சேக்கிழார் பெருமான், 'அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கல் அன்பு; அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவு; அவனுடைய செயலெல்லாம் நமக்கு இனியவா'' என்று அருளிச் செய்தார்.

[தொடரும்]

# சிவபெருமானின் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள்

சுகவனேஷ்வர், ஐ.ஏ.எஸ்.
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34.



சைவம், சாக்தம் ஆகிய இரு சித்தாந்தங்களிலும் பரம்பொருளை நிராகார ரூபமற்ற நிலை, அருவுருவநிலை, ரூபமுள்ள நிலை என்ற மூன்று படிகளிலும் பரம்பொருள் தியானிக்கப்பட்டு உபாஸிக்கப்படுகிறது. பரம்பொருளின் இயற்கையான நிலையை வேதம் மிகத் தெளிவாக,

யோ அஸைள ஸர்வேஷீ வேதேஷீ
பட்யதே ஹ்யஜ ஈஸ்வர;
அகாயோ நிர்குணோ ஹ்யாத்மா
தன் மே மன; சிவஸங்கல்பமஸ்து

என்ற மந்திரத்தில் பிறப்பற்றவர் ஈசுவரர், உடல் அற்றவர், நிர்குணர், ஆத்மா என்ற சொற்களில் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.

## சிவபெருமானின் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் நூல் வெளியீட்டு விழா

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில், சிவாகமபூஷணம் டாக்டர் எஸ். விசுவநாத சிவாச்சாரியார் அவர்கள் எழுதிய ''சிவபெருமானின் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள்'' எனும நூலின் வெளியீட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நம்அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு **சுகவனேஷ்வர், ஐ.ஏ.எஸ்.,** அவர்கள் நூலின் முதற்படியைப் பெற்றுச் சிறந்ததொரு உரை ஆற்றினார்கள். திருக்கோயில் வாசகர்கள் படித்து மகிழும் வண்ணம் நம் ஆணையாளர் அவர்களின் அணிந்துரையின் சாரம் தனிக்கட்டுரையாக இவ்விதழில் வெளியிடப் பெற்றுள்ளது. அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டப்படுகிறது.

மயிலை குருஜி சுந்தரராம சுவாமிகள், தொண்டை மண்டலாதீனம் கயிலைப் புனிதர் சீலத்திரு ஞான பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் அருளாசி வழங்கிச் சிறப்பித்தனர்.

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலய நிர்வாக அதிகாரியும் துணை ஆணையாளருமான திரு கு. சிதம்பரம் பி.ஏ., அவர்கள் விழாவிற்கு வருகை தந்த சான்றோர்களை வரவேற்றார். அறநிலையத்துறையின் முன்னாள் ஆணையாளர் திருமிகு வ. ராமதாஸ் ஐ.ஏ.எஸ் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். சிவத்திரு சாம்பமூர்த்தி சிவாச்சாரியார். சிவத்திரு என். குமாரசுவாமி குருக்கள், கல்லூரிக் கல்வித்துறை இணை இயக்குநர் டாக்டர் சிவ பார்வதி மற்றும் மயிலை சமஸ்கிருதக் கல்லூரி முதல்வர் திரு சேஷாத்திரிநாதர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தனர். நிர்வாக அதிகாரி திரு. கு. சிதம்பரம் பி.ஏ அவர்கள் நன்றி கூற விழா சிறப்புற நிறைவுபெற்றது.

ரூ. 7 விலை உள்ள இப்புத்தகம் மயிலை கபாலீசுவரர் ஆலயத்தில் கிடைக்கும்.

God head is a continuum. அதனைப் பிரிக்க முடியாது. எனினும் இறைவனின நிலையை நிர்குணப்பிரஹ்மம் ஆகிய சிவபரமாத்மா, இடைநிலையாகிய லிங்கப்பிரஹ்மம் உருவத்துடன் கூடிய சகுணப்பிரஹ்மம் என மூன்று அம்சங்களாகக் கருதி மூன்றினையும் உபாஸிப்பது பொருத்தமாகும்.

மலர்ந்த அயன மால் ருத்திரன் மகேசன்
பலந்தரும் ஐம்முகன் பரவிந்து நாதம்
நலந்தரு சக்தி சிவ வடிவாகி
பலந்தரு லிங்கம் பராசக்தியாமே.

சைவ, சாக்த சித்தாந்தங்களின் கருத்துப்படி சிவ, சக்தி, நாத, பிந்து ஆகியவை ரூபமற்ற நிலையினை உடையவை. அவற்றின் வடிவமாக, அவற்றைக் குறிக்கும் வகையில், அதாவது லிங்கம் சிவ தத்துவத்தையும் அதன் பிண்டிகை சக்தி தத்துவத்தையும் குறிக்கும் வகையிலும், ஓங்காரமே உறைந்து நிற்பது போலவும அமைக்கப்பட்டதாகும் லிங்கவடிவு.

ஜவலாய நம: ஜ்வல லிங்காய நம:

என வேதம் இறைவனை ஏத்தும்போது சிவ சக்திஸச்சிதானந்த ஜ்யோதியின் வடிவம் லிங்கம் என்பதை அறியலாம். சிவலிங்கத்தில் உருவ அம்சம் இருப்பதனால், அதனையே முதலாக வைத்து அறுபத்துநான்கு வடிவங்களை எடுத்துரைக்கும் ''சிவபராக்கிரமம்'' என்ற வடமொழி நூலும், பாம்பன் சுவாமிகள் எழுதியுள்ள ''அட்டாடவிக்ரஹ லீலை'' என்ற நூலும் இக்காலத்தில் நமக்குக் கிடைத்துள்ள அரிய நூல்களாகும். திருவானைக்காவலில் அருள்மிகு ஸ்ரீராஜராஜேசுவரர் கோயிலில் சதுஷ்ஷஷ்டிகலேசுவரர் என 64 மூர்த்திகளைக் குறிக்கும் வகையில் அத்தனை பட்டைகளுடன் ப்ரதிஷ்டிக்கப்பட்டுள்ளது. சென்னை அருள்மிகு ஸ்ரீ கச்சாலீசுவரர் கோயிலில் சுமார் 50 மூர்த்திகளின் படங்கள் உள்ளன. பொதுவாக மஹேச மூர்த்தங்கள் இருபத்தைந்து பழக்கத்தில் உள்ளவையாகும். அவைகளை மதுரை அருள்மிகு ஸ்ரீ சுந்தரேசுவரர் திருக்கோயிலில், த்வஜஸ்தம்பத்தின் அருகே காணலாம். இன்றைய காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் அலஹாபாத் திரிவேணி ஆதி சங்கர விமான மண்டபகோயிலிலும் இத்திருக்கோலங்கள் உள்ளன. அறுபத்து நான்கு சிவ மூர்த்தங்களுள், இருபத்தைந்து தனிப் பெரும் சிறப்புப் பெற்றவை என இந்நூலாசிரியர் விளக்குகிறார்.

இந்த அறுபத்து நான்கு மூர்த்திகளை கீழ்க்கண்டவாறு தொகுத்து நாம் புரிந்து கொள்ள, அறிந்து கொள்ள முயற்சிக்கலாம்.

| மூல அல்லது பொது வடிவு | அதனுடன் இணைந்த வடிவங்கள் |
|---|---|
| 1. லிங்கமூர்த்தி | 1. லிங்கோத்பவர் |
| | 2. முகலிங்கமூர்த்தி |
| 2. சதாசிவம் (இதுவே சகுணபிரஹ்மம்) | 1. மஹா சதாசிவ மூர்த்தம் |
| | 2. லகுளேஸ்வர மூர்த்தம் |
| | 3. ஏகபாத ஏகமூர்த்தி |
| 3. (அ) உமாமஹேச மூர்த்தி | 1. சுஹாசன மூர்த்தி |
| | 2. உமேச மூர்த்தி |
| | 3. சோமஸ்கந்தர் |
| | 4. சந்திரசேகரர் |
| | 5. ரிஷபாரூடர் |
| | 6. கங்காதரர் |
| | 7. கங்காவிஸர்ஜனர் |
| | 8. கல்யாணசுந்தரர் |
| | 9. அர்த்தநாரீஸ்வரர் |
| | 10. கௌரிவரப்ரதர் |
| | 11. கௌரீலீலா சமன்விதமூர்த்தி |
| | 12. ப்ரார்த்தநா மூர்த்தி. |
| (ஆ) நடேச மூர்த்திகள் | 1. ஸந்தியாநிருத்தர் |
| | 2. சதா நிருத்தர் |
| | 3. ஊர்த்துவ தாண்டவமூர்த்தி |
| 4. தட்சிணா மூர்த்தி | 1. யோக தட்சிணா மூர்த்தி |
| | 2. வீணா தட்சிணா மூர்த்தி |
| | 3. குருமூர்த்தி |
| 5. வீரமூர்த்திகள் (அ) தேவர்களின் செருக்கினை அடக்கும் மூர்த்தங்கள் | 1. சரபமூர்த்தி |
| | 2. வீரபத்ரர் |
| | 3. தட்சயக்ஞஹத மூர்த்தி |
| | 4. கங்காளமூர்த்தி |
| | 5. மத்ஸ்யாரி |
| | 6. கச்சபேசுவரர் |
| | 7. வராஹாரி |
| | 8. காமதஹன மூர்த்தி |
| (ஆ) அஸ்திர மூர்த்தங்கள் | 1. பாசுபத மூர்த்தி |
| | 2. அகோராஸ்திர மூர்த்தி |
| | 3. கிராத மூர்த்தி |
| (இ) அசுர ராட்சஸர்கள் முதலானோரை அழிக்கும் மூர்த்திகள் | 1. திரிபுராந்தகர் |
| | 2 கஜஸம்ஹார மூர்த்தி |
| | 3. சார்துலஹர மூர்த்தி |
| | 4. ஜலந்தரவத மூர்த்தி |

(ஈ) பைரவ மூர்த்திகள்
1. ஆபத் உத்தாரண மூர்த்தி
2. வடுக மூர்த்தி
3. சேத்திரபாலக மூர்த்தி
4. பிரம்ம சிரச்சேத மூர்த்தி
5. ரத்தபிட்சாப்ர தாந மூர்த்தி

(6) வைத்திய மூர்த்திகள்
1. ஜ்வராபக்ந மூர்த்தி
2. மிருத்யுஞ்ஜய மூர்த்தி
3. நீலகண்ட மூர்த்தி

(7) அயன்மாலுக்கு முதல்வன் என விளங்கும் மூர்த்திகள்
1. சங்கரநாரயண மூர்த்தி
2. ஏகபாத திருமூர்த்தி
3. திரிபாத திருமூர்த்தி
4. சக்ரப்ரத மூர்த்தி

(8) ஏனைய லீலா மூர்த்திகள்
1. ரிஷபாந்தகர்
2 புஜங்கலலிதமூர்த்தி
3. புஜங்க திராச மூர்த்தி
4. பிட்சாடனமூர்த்தி
5. சண்டேசானுக் கிரஹ மூர்த்தி
6. அச்வாருட மூர்த்தி
7. கஜாந்திக மூர்த்தி
8. கருடாந்திக மூர்த்தி
9. சிஷ்யபாவமூர்த்தி

ஸ்ரீ சக்கிரத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டமையால், நடேசப் பெருமானும் சிவகாமியும், சிவசக்தி லீலா மூர்த்தியே; எனினும் ஐந்தொழில், சிவசக்தி விலாஸமாகிய பேரம்பலம், பீடமாகிய சிற்றம்பலம் போன்ற முக்கிய தத்துவங்களை தெளிவாக எடுத்துக் காட்டும் மூர்த்தியாக இருப்பமையால், ஆடல் வல்லானை தனியே உட்பிரிவாக எடுத்துச் சொல்வது பொருத்தமாகும்.

வீர மூர்த்திகள் நிக்ரஹ-அனுக்கிரஹ மூர்த்திகள் எனவும் கூறப்படும். அசுர, ராட்ச ஸர்களை, தீய சக்திகளை அழித்து மேலும் தேவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் செருக்கினை ஒடுக்கியும் உலகைக் காத்து சிவநெறியை சிவதர்மத்தை நிலை நாட்டும் மூர்த்திகள்.

விநாயகருக்கும், முருகனுக்கும் அடுத்து பைரவரை சிவ குமாரனாகவே கருதுவதும் உண்டு. எனவே பைரவ மூர்த்திகள் தனித்துக் கூறப்பட்டுள்ளன.

## அளவற்ற பலமே சமயம் எனப்படும்

—சுவாமி விவேகானந்தர்

வைத்திய மூர்த்திகள் என்பவை பிறவிப் பிணி, தாபத்ரயாக்னியாகிய ஜ்வரம், ஆணவ மாகிய நஞ்சு முதலியவற்றை தீர்க்கும் மூர்த்திகள்.

மேற்கண்டவாறு பிரித்ததை சிற்சில மாற்றங்களுடன் கூடப் பிரிக்கலாம். உதாரணமாக லிங்கோத்பவ மூர்த்தியை அயன்மாலுக்கு முதல்வன் என விளக்கும் மூர்த்தங்களுடன் இணைத்துக் கூறலாம். அது போலவே அட்ட வீரட்டானம் என்று சிறப்பாக விளங்கும் திருத் தலங்களில் எழுந்தருளியுள்ள எட்டு மூர்த்தி களை ஒருங்கே இணைத்துக் கூறலாம். நீல கண்ட மூர்த்தியை அம்மையுடன் உள்ள மூர்த்திகளுடன் சேர்க்கலாம்.

''சுத்தவித்யா தேஹ மஹா சதாசிவாய நம''

என்ற சிவாகமத்ரிசதியில் கூறியபடி, மஹா சதாசிவத்தை குருமூர்த்திகளுடன் இணைத் தாலும் பொருத்தமாக இருக்கும். முகலிங்கத் துள்ள முகங்கள் சேர்ந்து சதாசிவ மூர்த்தியாவ தால் இவையிரண்டும் நெருக்கமான தொடர் புடையவை. சக்ரதான மூர்த்தியை அஸ்திர மூர்த்திகளுடன் சேர்க்கலாம். நாம் எப்படி பிரித்தாலும், புரிந்து கொண்டாலும் சரி, எக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி, அடி முடி காணாது மாலும் அயனுமே திகைக்கும் போது சிவபெருமானுடைய பெருமை நம் முடைய வாக்கிற்கும், மனத்திற்கும் அடங்காது என்பதையே அவ்வப்பொழுது பயபக்தியுடன் பணிவன்புடன நினைவில் கொள்ள வேண்டும்.

அடுத்து சைவ சித்தாந்தத்தின் சில தத்து வங்களையும் அவற்றுடன் இணைந்த உருவங் களையும் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்:

| | |
|---|---|
| 1. சிவ தத்துவம் | லிங்கம் |
| 2. சக்தி தத்துவம் | லிங்கத்தின்பிண்டிகை |
| 3. சதாசிவ தத்துவம் | முகலிங்கம் சதாசிவ மூர்த்தி |
| 4. ஈசுவர தத்துவம் | உமாமஹேஸ்வர மூர்த்தியும் அது போன்ற பிற மூர்த்தி களும் |
| 5. சுத்த வித்யைத் தத்துவம் | மஹா சதாசிவம் தட்சிணாமூர்த்தி வடிவங்கள். |

எனவே சிவ தத்துவங்களை விளக்கும் வகை யில் மூர்த்திகள் உள்ளன என்பதையும் நாம் அறியலாம்.

இந்நூலாசிரியர் அறுபத்திரண்டாவது மூர்த்தியான பிரார்த்தநா மூர்த்தியை விளக்கு கையில், சிவபெருமானுக்கு போக சக்தியாக பவானியும், குரோத சக்தியாக காளியும், போர்ச் சக்தியாக துர்கையும், புருஷசக்தியாக விஷ்ணுவும் அமைந்துள்ளனர் எனக் குறிப்பிடு கிறார். இப்படிப்பட்ட சக்திகளுடன் இணைந்த மூர்த்திகளை கீழ்க்கண்டவாறு நாம் உணர லாம்.

(1) அம்மையுடனிருந்து, கருணை பொழியும் மூர்த்திகள் அனைத்துமே போக சக்தியுடன் இணைந்ததாகக் கொள்ளலாம்.

(2) சரபேஸ்வரர், பைரவர் ஆகிய மூர்த்தி கள் காளி துர்க்கையுடன் இணைந்ததாகக் கொள்ளலாம்.

(3) இறுதியாக சங்கரநாராயண வடிவத் தினை புருஷ சக்தியுடன் கூடிய வடிவமாக உணரவேண்டும்.


(6) 1. மேலும் போக சக்தியுடன் இருக் கும் வடிவங்களைக் கீழ்க்கண்ட வகையாக நாம் பிரித்து உணரலாம்.

1. உமையுடன் இணையும் கல்யாணசுந்தரர் மூர்த்தி
2. உமையுடன் எப்போதும் இருக்கும் மூர்த்திகள் உமாமஹேஸ்வர மூர்த்தி முதலியவை
3. உமையுடன் ஒன்றி இணைந்து இருக்கும் அர்த்தநாரீஸ்வரர் மூர்த்தி
4. இணைப்பின் பயனாகக் காட்சியளிக்கும் மூர்த்தி சோமாஸ்கந்தர்

சிவபெருமானும் சக்தியும் பிரிக்க முடியாத அளவில் இருக்கிறார்கள் என்பதை ருத்ர ஹ்ருதய உபநிஷத் பல்வேறு உதாரணகளைக் காட்டி விளக்குகிறது.

ருத்ரோ அர்த்தக: அட்சர: ஸோமா
தஸ்மை தஸ்யை நமோ நம:
ருத்ரோ லிங்கம் உமா பீடம் தஸ்மை
தஸ்யை நமோ நம:

கணவன்-மனைவி போலும், ப்ரஹ்மா-வாணி போலும், விஷ்ணு-லட்சுமி போலும். சூர்யன்-சாயை போலும், சந்திரன்-நட்சத்திரம்போலும் பகல்-இரவு போலும், யக்ஞம்-வேதி போலும், அக்னி-ஸ்வாஹா போலும், வேத-சாஸ்திரம் போலும், மரம்-கொடி போலும், மணம்-மலர் போலும், பொருள்-சொல் போலும், லிங்கம்-பீடம் போலும் சிவ சக்திகள் பின்னிப்பிணைந் துள்ளன என உபநிடதம் கூறுகிறது.



**ஞானம் எனும் மிதியடியை அணிவார்க்கு உலகமெனும் கல்லிலும் முள்ளிலும் நடப்பது எளிதானதாகும்.**

***—இராமகிருஷ்ணபரமஹம்சர்***

7. 'பல பல வேடமாகும் பரன் நாரி பாகன்' என திருஞான சம்பந்தர் விளக்கிய வாறு, சிவபெருமானின் 64 மூர்த்தங்கள் சிவ மஹிமையை ஓரளவுக்கு நம் சிற்றறிவிற்கு உணர்த்தவே அமைந்துள்ளன. ஆங்கிலத்தில் 'Sixty four forms of Lord Siva are representative and by no means exhaustive' எனக் கூறுவது பொருத்தமாக இருக்கும். எடுத்துக்காட்டாக, அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் யோகபோகேஸ்வரர் என்ற அற்புதமான மூர்த்தியொன்று உள்ளது. 'ஐயைந்தின் அப்புறத்தானும்' என திருநாவுக் கரசர் தியாகேசப் பெருமானைக் குறிப்பிடும் போது, 64 மூர்த்தங்களுக்கும் அப்பாற்பட்ட வன் என்பதையே நாம் உணரவேண்டும். அது போலவே, இந்நூலில் குறிப்பிட்ட மூர்த்தி களுள் விநாயகப் பெருமானுடன் இணைந்த மூர்த்திகள் குறிப்பிடப்படவில்லை. சோமாஸ் கந்தர் போல் சோமாகணபதி என்ற மூர்த்தி யும் உண்டு என்பது பெரியோர் கருத்து. ஐராவ தத்துக்கு அருட்செய்த கோலமாகக் கருதப் படும் கஜாந்திக மூர்த்திக்குப் பதில் ஒரு சிலர் விக்னேஸ்வரப்ரசாத மூர்த்தியினை கணக்கில் எடுத்துச் கொள்வர்.

உலக வாழ்வில் உள்ள நம் போன்றோ ருக்குப் பொதுவாக அம்மையுடன் இருந்து கருணை பொழியும் மூர்த்திகளுள் ஏதாவது ஒன்றினைப் பிரதான மூர்த்தியாக வைத்து ஏனைய மூர்த்திகளை வழிபடுவதே சாலச் சிறந்தது. அதனால் எல்லா பேறுகளும் கிடைக் கும் என ஆன்மிகத்திலும், உபாஸனா வழி யிலும் தேர்ச்சி பெற்ற பெரியோர் கூறுவர்.

# குரு யார்?

ஞானச்சேரி ஞானிகள், வேளச்சேரி ஆசிரமம்.

குரு யார்? மௌனத்தைத் தோற்றுவிக்கின்றவனே குரு. மௌனத்தைத் தோற்றுவித்த மனிதன் யார் என்ற வினா எழுப்பினால் நாளைக்கும் அதற்கு விடை கிடைக்காது. நாளையென்ன? எப்பொழுதுமே மனிதனால் மௌனத்தைப் படைக்கவும் இயலாது. தோற்றுவிக்கவும் இயலாது. அப்படியானால் மௌனத்தைத் தோற்றுவித்த குரு கடவுளே. கடவுள் தட்சிணாமூர்த்தியே. மௌனகுரு என்பதை அறியுங்கள்.

அமைதியின் வடிவமே மனம். அது இமய மலையைப் போன்றது. இமயத்தை எவரும் படைக்கவில்லை. அதை யாரும் உருவாக்கவில்லை. தோன்றியது. அதனால் இமயம் தோன்றியது என்று மனதினால் சொல்ல முடிகிறது. அதைப் பார்க்க முடிகிறது. இமய மலையைக் கண்ணால் பார்க்க முடிவதைப் போன்று தோன்றிய மௌனத்தைக் கண்ணால் பார்க்கலாம். கண்களால் தரிசிக்கலாம். கடவுளே மௌனம். கடவுள் தட்சிணாமூர்த்தியே மௌனம் என்று இப்பொழுது சொல்லுங்கள். பாருங்கள்.

மனித சமுதாயத்திற்கு ஒட்டு மொத்தமாக தட்சிணாமூர்த்தியின் மீது பக்தி வர வேண்டும். அதற்கே இவ்வெழுத்துக்கள் பயன் பட வேண்டும் என்று ஞானிகள் நினைக்கிறார். மௌனத்தில் விருப்பம் கொண்ட மனிதனே பெரிய மனிதனாவான். பக்தன் என்ற பட்டப் பெயரையும் பெறுவான். பெரிய மனிதன் ஆனாலே பக்தன் என்று தான் பெயர். அவனை அப்படித் தான் அழைக்க வேண்டும் என்கிறார் கடவுள்.

நாட்டிலுள்ள மக்களே உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு எண்ணம் வேண்டுமா? ஒரே ஒரு எண்ணம் போதுமா? அல்லது பல எண்ணங்கள் போதுமா? இல்லை..பற்பல எண்ணங்கள் உதயமாக வேண்டுமா? பற்பல எண்ணங்களே மனிதன். மாற்றிச் சொன்னால் பற்பல எண்ணங்களைக் கொண்டவனே மனிதன்.

இன்று மனிதன் மன அமைதியில் இல்லை. எண்ணத்தில் அல்லது எண்ணங்களில் ஆண்டவன் இருந்திருந்தால் நீ நிம்மதியாக இருந்திருப்பாய். இதுவே தட்சிணாமூர்த்திக்கு உரை. அதுவே அதனின் தத்துவம். இதை மனிதன் அறிந்து கொண்டால் உடனே அமைதி கண்டு விடுவான். இன்றைய உலகிற்கும் நாட்டிற்கும் இதுவே தேவைப்படுகிறது. இது எப்படி கிடைக்கும் என்று யோசிக்காதீர்கள். எழுதுகிறேன். படியுங்கள்.

மன அமைதி கொள்ள நினைக்கும் பக்தர்களே! மனித எண்ணங்களே தட்சிணாமூர்த்தியின் கையிலுள்ள ஜெபமாலை உருத்திராட்ச மாலை: முழுமையான ஒவ்வொரு எண்ணமும் வெற்றியைத் தந்துவிட்டு நமது நினைவிலேயே உருண்டோடி நிற்கும். இதற்காகவே ஆண்டவன் கையினால் தனது ஜெபமாலையையுருட்டுகிறார். நீங்களும் இறைவனைப் போன்று எண்ணங்களை உருட்டுங்கள். எண்ணமும் நடைபெறும். ஜெபமும் நடைபெறும்.

மனிதன் தனது எண்ணப்படி நினைவு என்னும் விரலால் எண்ணத்தை ஓட்டிக் கொண்டே போனால் ஒன்றும் நடைபெறாது. இதுவே இன்றைய மனிதநிலை இந்த நிலை மாற வேண்டும். கருத்துடன் எதையும் படித்து தட்சிணாமூர்த்தியானால் நீயும் மௌனத்தில் பல செயல்களைச் செய்து முடிக்கலாம்.

சாலையில் ஓடுகின்ற வண்டி மௌனத்தையே குறிக்கிறது. ஓடுவது செயல்; ஓடுவது தொழில் என்பதால் அது வீணில்லை. மௌனமே. அங்கு கடவுளைக் கண்டேன். சமுதாயமே நீயும் அங்கேயே கடவுளைப் பார்.

பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருக்கின்ற புகைவண்டி ஒரு மௌனமே. அது பலரின் பயணத்திற்கே காத்துக் கிடக்கிறது. வண்டி நிற்பதும் ஓடுவதும் வீணில்லை. மௌனத்தால் பெரிய செயலாற்றலையே கடவுள் உபதேசித்தான். மௌனத்தால் தொழிலை உணர்த்தினான் கடவுள்.

அமைதியும் மௌனமும் ஒன்றே. அது இந்திய நாட்டில் கோயில்களில் தட்சிணாமூர்த்தியாய் செயல் பட்டதே ஒழிய எதையும் இதுவரை வீணடிக்கவில்லை. ஆகவே இத்தகைய மௌன குருவை எண்ணுங்கள். அவனை எண்ணி ஜெபம் செய்யுங்கள். அக்கடவுளை வணங்குங்கள்.

அமைதியான தொழிலுக்கே தொழிலமைதி என்று பெயர். அமைதியான செயலுக்கே செயலில் அமைதி என்பது தெரியும். அமைதியில் அமைதி என்பது என்ன? அமைதியல்ல. அதுவே உலகம். இதுவே தட்சிணாமூர்த்திக் கடவுள் உபதேசிக்கின்ற உண்மை.

கோயிலில் கடவுள் செயல்பட்டானா இல்லையா என்று சந்தேகப்படாதே. தயவு செய்து இந்த வண்ணம் சிந்திக்காதே. கோயிலில் கடவுள் சக்தியுடன் இருக்கின்றான். செயல் படுகின்றான். இதுவே உண்மை. மனிதன் எதை நினைத்தாலும் நினைத்துச் செயல் படுகின்றான் என்பது புரியும். இதுபோல கடவுளை நினைக்கின்றவனின் தியானமும்ஆகிறது. அப்படிப்பட்டவர்களே பிற்காலத்தில் பக்தர்களாக ஆகிறார்கள். ஞானிகளாக விளங்குகிறார்கள். இதைப் படிக்கின்ற மனிதன் அறிய ஒரு உதாரணத்தைத் தருகின்றேன்.


ஒருவன் தனது கையில் ஒரு கைக்கடிகாரத்தைக் கட்டிக் கொண்டிருந்தான். அது ஓடுகின்ற காலத்தை மணியாகக் காட்டிக் கொண்டிருந்தது. கடிகாரத்தின் கண்ணாடியின் வழியே வெளியில் தெரிவது இரண்டு முட்களே. ஓடிச் சுற்றுகின்ற மணியே கடிகாரத்தை எடுத்துக் காட்டுகிறது.

இது போல கடவுள் பக்தனின் ஓட்டத்தை உலகம் எடுத்துக் காட்டும். பக்தனின் செயலும், கடிகாரத்தின் ஓட்டமும் ஆரவாரமாய் இருக்காது. மௌனமாகவே இருக்கும். கடிகாரத்தின் உள் பல சக்கரங்கள் ஓடினால் தான், கடிகாரம் வெளியே தெரியும். ஓடும். அதுபோல மனிதன் செயல்பட வெளி உலகில் விளங்க மௌனகுருவான தட்சிணாமூர்த்தி வேண்டும்.

அருள்மிகு

# கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயில்

**மயிலாப்பூர், சென்னை-600 004.**



# தங்கரத திருப்பணி நன்கோடை வேண்டுகோள்

இத்திருக்கோயிலில் சுமார் ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் தங்கரதம் செய்ய தீர்மானிக்கப்பட்டு அதற்கான திருப்பணி நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட்டுள்ளன. அன்புகூர்ந்து இந்த தங்கரத திருப்பணியில் தாங்களும் பங்கேற்று தங்கள் கைங்கர்யமாக போன் காணிக்கை அல்லது ரோக்க காணிக்கையினை "துணை ஆணையர் - நிர்வாக அதிகாரி, அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை-600 004. (தொலைபேசி எண். 71670) என்ற முகவரிக்கு அனுப்பி, தங்கரத திருப்பணி சிறப்புடன் நடந்திட மேலான ஒத்துழைப்பினை நல்கி, அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரப் பெருமானின் பேரருளுக்குப் பாத்திரராகும்படி அன்புடன் வேண்டுகிறேன்,

கு. சிதம்பரம், பீ.ஏ.

*தக்கார்/துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி*

# கந்தவேள் கருணை



**டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்**

**[46]**


இமையவர்களின் ஆரவார ஒலி கேட்டு சினந்த சூரபன்மன், தேவர்களை நோக்கி, 'என் முன்னே வருவதற்குப் பயந்திருந்த தேவர்களே! உங்களுக்கு இத்துணை ஆணவமா? ஆரவாரமா? முதலில் உங்களைக் கொல்வேன்'' என்று தேரை வானத்தில் செலுத்தினான். சூரபன்மன் தேரோடு விண்ணுலகத்தில் நின்று கோடானுகோடி பாணங்களைத் தேவர்கள் மீது செலுத்தினான். அதனால் தேவர்கள் புண்பட்டுச் சிதறி ஓடினார்கள். அதனைக் கண்ட கந்தக் கடவுள் பூமியில் நின்றபடியே எண்ணற்ற பாணங்களை விடுத்துச் சூரபன்மனின் கணைகளை அழித்தார். பின் வாயுவை நோக்கி, ''நம்முடைய தேரை விரைந்து வானத்தில் செலுத்து'' என்று பணித்தார். வாயு தேரைச் செலுத்திக் கொண்டுவிண்ணுலகத்தில் சூரபன்மனுக்கு எதிரே கொண்டுபோய் நிறுத்தினார். சூரபன்மனுக்குப் பயந்து சிதறி ஓடிய தேவர்களுக்குக் குமாரக் கடவுள் அபயஹஸ்தம் தந்து அவுண மன்னனுடன் அற்புதப் போர் புரிந்தார். இருவருடைய தேர்களும் காற்றாடி போலவும் குயவனின் கைத் திகிரி போலவும் சரளமாகச் சுழன்றன. பாதாளத்திலும், கடல் நடுவிலும் அண்ட கடாகங்களிலும் சாரிகை வந்தன. அத்தேர்களின் ஒலியைக் கேட்டுத் தேவர்கள் வாடினார்கள். யட்சர்கள் மருண்டார்கள்; நாகர்கள் அலைந்தார்கள்; மலைகள் பிளந்தன; கடல்கள் வற்றின; பூதலம் நடுங்கிற்று; நட்சத்திரங்கள் உதிர்ந்தன; மேகங்கள் சிந்தின.

இறுதியில் தேரையும், குதிரைகளையும், பல ஆயுதங்களையும் இழந்த சூரபன்மன் கையிலேந்திய வில்லோடு பூமியை அடைந்தான். சுவாமியும் பூதலமுற்றார். மீண்டும் பயங்கரப் போர் நடந்தது.

வெற்றி தோல்வியில்லாமல் போர் நீடித்தது. சூரபன்மன் மாய யுத்தம் செய்ய எண்ணி விண்ணில் தோன்றினான். உடனே குமாரக் கடவுளும் அவனைப் பின்தொடர்ந்து வானத்தில் சென்று அவனை எதிர்த்தார். சூரபன்மன் மீண்டும் மண்ணில் தோன்றினான். முருகவேளும் பூமியில் வந்து போர் செய்தார். சூரபன்மன் அங்கிருந்து மறைந்து தன் வடிவை மறைத்துநன்னீர்க்கடல் நடுவில்தோன்றினான். எங்கும் எப்போதும் தங்கும் முருகவேள்அங்கும் தோன்றிப் போர் செய்தார். சூரன் பாதாளத்துக்குச் சென்றான். முருகவேளும் பாதாளத்தில் சென்று போர் செய்தார். சூரபன்மன் அங்கிருந்து மறைந்து மேரு மலையின் உச்சியில் தோன்றுவான். மேக நடுவில் தோன்றுவான். முருகவேளும் ஆங்காங்கு தொடர்ந்து சென்று போர் புரிந்தார். சூரபன்மன் தன்னுடைய இந்திரஞாலத் தேரை நினைத்து அழைத்து அதன் மீதேறி ஒரு கணப்பொழுதும் ஓரிடத்தில் நிற்காமல் சூறைக் காற்று போல் சுழன்று அண்ட கோளகையின் வாயிலை அடைந்தான். அங்கு சேனைகள் வராவண்ணம் முருகவேள் தம் கணைகளினால் வாயிலை அடைத்திருப்பதைக் கண்டு நகைத்தான். வில்லை வளைத்து பல கோடி கணைகளைச் செலுத்தி அண்ட கடாகத்தின் வாயிலைமூடியிருந்த தடைகளைத் துணித்தான். உடனே அப்பால் அண்டங்களில் நின்று கொண்டிருந்த நால்வகைச் சேனைகளும் ஆர்த்து வந்தன. அவை ஆயுதங்களை எறிந்து குமாரக் கடவுளைச் சூழ்ந்தன. குமரவேள் தீ எழும்படி சிறுநகை செய்தார். அந்தச் சேனைகள் யாவும் சாம்பலாயின. உடனே மற்றோர் அண்டத்திலுள்ள சேனைகள்வந்து கந்தவேளை எதிர்த்தன. அந்தச் சேனைகளை ஹூங்காரத்தாலும் பார்வையாலும் அழித்தார் எம்பெருமான். மீண்டும் மீண்டும் வேறு வேறு அண்டங்களிலுள்ளசேனைகள் வந்துகொண்டேயிருக்க, குமாரக் கடவுள் தமது திருக்கரத்திலுள்ள மழு, சூலம், சக்கரம், தண்டு, எழு என்ற ஐந்து படைக்கலங்களை நோக்கி, நீங்கள் விரைந்து சென்று நம்மைச் சூழ்ந்த அவுண சேனைகளைக் கொன்று வாருங்கள்'' என்று கூறி விடுத்தார். அப்படைக்கலங்களும் பற்பல உருவங்களை எடுத்து ஆயிரத்தேழு அண்டங்களுக்கும் சென்று அங்குள்ள சேனைகள் யாவற்றையும் அழித்து மீண்டன.

பலகோடி அவுணர்களும் அழிந்ததைக் கண்ட சூரபன்மன் 'ஒரு கணப்பொழுதில் இவனைக் கொல்வேன்' என்று கூறிமுன்னர்ச் சிவபெருமான் தந்த சக்கரப் படையை எடுத்து வழிபட்டு முருகவேள் மீது செலுத்தினான். முருகப் பெருமான் அதனை ஒரு திருக்கரம் நீட்டிப் பரிசுப் பொருளைப் பெறுவது போலப் பற்றினார்.

மனம் தளர்ந்தான் சூரபன்மன். உள்ளத்தை உறுதிப் படுத்திக் கொண்டு இந்திர



ஞாலத் தேரின்மீது ஏறினான். மாயையால் அளவற்ற உருவங்களை எடுத்துப் பாண மழை பொழிந்தான். அமரரைக் காக்க வந்த குமாரக் கடவுள் ஞானாஸ்திரத்தை எடுத்து விடுத்தார். அந்த அஸ்திரம் விரைந்து சென்று சூரபன்மனின் மாயைகளையெல்லாம் அழித்தது. வலியிழந்த சூரபன்மன் தேரோடு மறைந்து போய்விட்டான். அவனுடன் எம் பெருமானும் மறைந்து போனார். அண்டங்கள் எல்லாம் நிலைகுலைந்தன. முருகக் கடவுளைக் காணாது அமரர்கள் தாய் தந்தையரை விட்டுப் பிரிந்த குழந்தைகள்போல் வாடி வருந்தினர். பிரம்மதேவர் முதலியோர் திருமாலிடம் சென்று, ''சூரபன்மனைத் தொடர்ந்து சென்ற பெருமானின் நிலை யாதோ?'' என்று முறையிட்டுக் கொண்டனர்.

''ஓதியாகியும் உணர்ந்தவர்க் குணரவும்
ஒண்ணா
நீதி யாகியும் நிமலம தாகியே நிகழுஞ்
சோதி யாகியும் தொழுதிடும் எம்மனோர்க்
கெல்லாம்
ஆதி யாகியும் நின்றவன் அறுமுகன் அன்றோ!''

''தேவர்களே! அஞ்சாதீர்கள்! ஆதி பரம் பொருளாக இருக்கிற எம்பெருமானுக்கா ஆபத்து வரும்? சூரபன்மன் வலிமையை மதித்து அச்சப்படாதீர்கள். ஆறுமுகக் கடவுளாக விளங்குபவர் ஆதிமுதல்வர் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்'' என்று கூறினார் திருமால்.

திருமால் கூறியதைக் கேட்டுத் தேவர்கள் மனத்தெளிவும் மகிழ்ச்சியும் பெற்றனர்.

எல்லா அண்டங்களுக்கும் ஓடிய சூரபன்மன் அங்கெல்லாம் முருகவேளுடன் போர் செய்து கடைசியில் மகேந்திரபுரிக்கே திரும்பினான். குமாரக் கடவுளும் திரும்பி வந்து தேவர்கள் நெஞ்சில் பால் வார்த்தார். விடாது தொடர்ந்து சென்றார். அங்கிருந்த அவுண வீரர்கள் முருகவேளைச் சூழ்ந்து ஆரவாரம் செய்தனர். ஆறுமுகக் கடவுள் அந்தச் சேனைகளை நோக்கித் திருப்புன்முறுவல் செய்தார். அந்தப் புன்முறுவலால் சூரபன்மன் சேனை முழுவதும் அழிந்தது. அவுண சேனைகள் எல்லாம் அழிந்ததைக் கண்ட தேவர்கள் மகிழ்ந்து பூமாரி பொழிந்தார்கள்.

அவுண சேனைகள் எல்லாம் அழிந்து தனித்து நின்றான் சூரபன்மன். அவுண சேனையனைத்தையும் இழந்த சூரன் ஆற்றாமை தாங்கொணாது 'அம்மா' என்று தன் தாயான மாயையை அழைத்தான். அவன் தாய் மாயா தேவி உடனே அங்கு தோன்றினாள்.

''தாயே நான் தனித்து நிற்கிறேன். நீதான் எனக்கு உதவி புரிய வேண்டும்'' என்று அவளை வேண்டிக் கொண்டான் சூரபன்மன்.

''மகனே! எல்லோரும் அழிந்தபின் கூட உன் மனம் தெளிவு பெறவில்லையே? தேவர்களைச் சிறையிலிருந்து விடுவிக்க விரும்பவில்லை. முழுமுதற் கடவுளாகிய முருகவேளைப் பாலகன் என்று எண்ணிவிட்டாய், அவரை எதிர்க்கக் கூடாது'' என்று மாயை புத்திமதி கூறினாள். மாயையே ஞானத்தைப்

பேசினாள் என்பது விந்தையிலும் விந்தை யன்றோ? ஆனால் இதற்கும் மசியவில்லை அழிவை நாடிவிட்ட அவுணனின் அறிவு.

''அம்மா! நீ எனக்கு உபதேசம் செய்ய வேண்டியதில்லை. உதவிதான் செய்ய வேண்டும். உதவப் போகிறாயா இல்லையா?'' என்று கோபத்துடன் கேட்டான் மாயையை.

'என்ன உதவி செய்ய வேண்டும்'? என்று கேட்டாள் மாயை.

''இறந்தவர்கள் எல்லோரும் மீண்டும் உயிர் பெற்று எழுவதற்கு வழி சொல்'' என்று கேட்டான் சூரபன்மன்.

மாயையும் அதற்கு வழி கூறலானாள். ''மகனே, ஏழு கடல்களுக்கப்பால் அமுத சீத மந்தர கூடம் என்று ஒரு மலை இருக்கிறது. அதனை இங்கே கொண்டு வந்தால் இறந்தவர்கள் எல்லோரும் உயிர்பெற்று எழுவார்கள்'' என்று கூறி மறைந்தாள் மாயை.

சூரபன்மன் இந்திரஞாலத் தேரினின்றும் இறங்கிச் சிங்கவாகனத்தில் ஏறிக் கொண்டான். இந்திர ஞாலத் தேரை நோக்கி, ''நீ ஏழு கடல்களுக்கும் அப்பால் உள்ள அமுத சீதமந்தர மலையை இங்கே கொண்டு வா'' என்று ஏவினான்.

இந்திரஞாலத் தேர் ஏழு கடல்களையும் கடந்து சென்று அமுதசீத மந்தர மலையைப் பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்தது. அந்த மலையின் காற்று பட்டவுடன் இறந்த அசுரர்கள் அனைவரும் உயிர் பெற்று எழுந்தனர். அசுரர் தரப்பில் இறந்து வீழ்ந்த குதிரைகளும், யானைகளும் எழுந்தன, சிங்கங்கள் எழுந்தன. சிங்கமுகாசுரன் எழுந்தான், பானுகோபன் எழுந்தான். அக்கினிமுகன் எழுந்தான். வச்சிரவாகு எழுந்தான். தருமகோபன் எழுந்தான். அதிசூரன், அசுரேந்திரன் ஆகியோரும், மூவாயிரவரும் மற்றையோரும் உயிர்பெற்று எழுந்தனர்.

சூரபன்மன் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான், இவ்வளவு காலப் போரில் அவன் இழந்த அவ்வளவையும் அல்லவா மீண்டும் பெற்றுவிட்டான்?' 'இனி உய்வு இல்லை' என்று தேவர்கள் ஏங்கினார்கள். பூத வீரர்கள் கலங்கினார்கள்.

முருகவேள் மட்டும் புன்முறுவல் பூத்தார். ஏனைய பூதப் படையினரும் தேவரும் தாங்கள் மகத்தான போர் புரிந்து தமது திறத்தைக் கொண்டே இவ்வளவு நாள் போரில் அவுணர்களைக் கொன்றதாகச் செருக்குற்றிருக்கக் கூடும் அல்லவா? அத்தகைய செருக்கைக்களைய வேண்டுமென்றே இன்று இறந்த அசுரர் யாவரும் உயிர் பெற்றுத் தனியொருவரான தம்மாலேயே வெல்லப் படுவதற்காக வந்துற்றனர் என்று கருதினார் கந்தசாமி. சர்வ சம்ஹார அஸ்திரத்தை எடுத்தார்.

திருச்சேய்ஞலூர் என்பது சண்டேசுவர நாயனார் அவதரித்த தலம். அங்கே முருகப்

## கார்த்திகை விரதம்

**கந்தனை கார்த்திகை மகளிர் போற்றி வளர்த்தமையால் கார்த்திகேயன் என்பது அவர் திருநாமம் ஆயிற்று. கார்த்திகை நட்சத்திரத்தில் விரதமிருப்போர் முருகரிடம் வேண்டிய வரங்களைப் பெற்று உய்ந்து வீடுபேறும் பெறுவர்.**

பெருமான் சிவபெருமானைப் பூஜை செய்த போது சிவபெருமான் இந்த சர்வ சம்ஹார அஸ்திரத்தை அளித்தார். அதனை இப்போது எடுத்து விடுத்தார் சுவாமி. அந்த அஸ்திரம் விரிசடைக் கடவுள் திரிபுரமெரித்தது போல் யாவரையும் கணநேரத்தில் ஒருங்கே அழித்தது. மாண்டவர்கள் அனைவரும் எவ்வளவு வேகமாக உயிர் பெற்று எழுந்தார்களோ அவ்வளவு வேகமாக அழிந்து போனார்கள். இந்திரஞாலத் தேரின் மீதிருந்த அமுதசீத மந்தர கூடமும் தூளாகியது. இனி அவர்களைப் பிழைப்பிக்க வழி ஏது?

கனவிலும் கருதவொண்ணாத நிதியம் கிடைத்த பின் கிடைத்த வேகத்திலேயே கைவிட்டுச் சென்றதுபோல் சூரபன்மன் சோர்ந்தான். உற்றம், சுற்றம் அனைத்தும் இழந்த சூரபன்மன் முருகவேளும் தன்னைப்போல் தனித்திருக்க வேண்டும் என்று கருதினான். தனித்திருக்கும் ஏகநாயகன்தான் ஐயன் என்பதை அவன் எப்படி அறிவான்?

இந்திரஞாலத் தேரை நோக்கிய சூரன், ''நீ பூதரையும் வீரரையும் கவர்ந்து சென்று அண்ட கோளகையின் உச்சியில் அடைத்து வைத்துக் கொண்டிரு'' என்று கட்டளை இட்டான். இந்திரஞாலத் தேர் வீரவாகு முதலிய வீரர்களையும், இலக்கத்தொன்பதின்மரையும் இரண்டாயிரம் பூத வெள்ளங்களையும் மயக்கி வாரிக்கொண்டு அண்டகோளகைக்குச் சென்று சூரபன்மன் கட்டளைப்படி அங்கேயே அடைத்து வைத்துக் கொண்டிருந்தது. முருகவேள் தனித்து நின்றார்.

(முருகவேளுடன் தன்னந்தனியாகநிற்கும் மகா அநுபவத்தை அருணகிரிநாதர் இன்னம் ஒருவருக்கு இசைக்க இயலாது என்பார். சூரனுந்தான் சுவாமியுடன் தன்னந் தனியாக நின்றான், ஆனால் உணர்வில் என்ன மாறுபாடு?)

முருகனைத் தனித்து நிற்கச் செய்த இந்திரஞாலத் தேரின் வலிமையைக் கண்டு சூரன் வியந்தான்; மகிழ்ந்தான். அந்த வியப்பையும், மகிழ்ச்சியையும் வினாடியில் தவிடு பொடி செய்ய வேலாயுதப் பெருமான் அறிய மாட்டாரா? கணையை எடுத்தார் சுவாமி; வில்லிற் பூட்டி விடுத்தார். அப்படை வேற்படை போன்று ஒளிவீசி எல்லா உலகங்களையும் கடத்திச் சென்று இந்திரஞாலத் தேரை அடைந்து அதன் ஆற்றலை அழித்தது. பிறகு

அத்தேரைப் பூமிக்குக் கொண்டு வந்து பெருமான் முன்னிலையில் நிறுத்தியது. அதனின்று வீரவாகு தேவரும் மற்ற வீரரும் பூதரும் மண்ணிற் குதித்து முருகப் பெருமானை வணங்கினார்கள். இந்திரஞாலத் தேரை நோக்கிய குமாரக் கடவுள். ''இனி சூரபன்மனிடம் செல்லாதே; இங்கேயே நில்'' என்று பணித்தார். அந்த ஆணையின் வண்ணமே தேர் பெருமான் அருகில் நின்றுவிட்டது.

தேர் போய்விட்டாலும் சூரனுக்கு ஒரு சிங்க வாகனம் உண்டு. அதன் மீது ஏறிச் சினத்துடன் கந்தவேள்மீது கணைகளைப் பொழிந்தான். முருகப் பெருமானும் சினத்துடன் கணைகளை விடுத்துச் சூரபன்மன் விடுத்த கணைகளையெல்லாம் அழித்தார். வாயுவின் உடல் எல்லாம் புண்பட்டது. வாயு தேவன் வருந்திப் புலம்பித் தேர்க் குதிரைகளை ஓட்டாமலிருந்தான். எம்பெருமான் உடனே ஆயிரம் கணைகளைச் செலுத்தி சூரபன்மனின் வில்லைத் துண்டித்தார். சூரன் முன்பு சிவபெருமான் அளித்திருந்த முத்தலைச் சூலத்தை எடுத்துக் கொண்டு முருகவேளை நெருங்கினான். அவனது வாகனமாகிய சிங்கம் சீறிப் பாய்ந்து முருகவேளின் தேர்க் குதிரைகளை அடித்துப் புண்படுத்தியது. சூரபன்மன் முத்தலை சூலத்தை எடுத்து கந்தவேள் மீது வீசினான். மின்னல்போன்று ஒளி வீசி அச்சூலம் ஆகாய வழியாகச் சென்றது. செல்லும் பொழுது தீ சிந்தியது; இடிகள் முழக்கமிட்டன. அந்த சூலத்தின் மீது பெருமான் ஆயிரம் கணைகளை விடுத்தார். அக்கணைகளையெல்லாம் அழித்த சூலம் முருகப் பெருமானை நெருங்கியது. ஆறுமுகக் கடவுள் தம்முடைய திருக்கரத்திலிருக்கும் குலிசத்தை நோக்கி, ''சூரபன்மன் விடுத்த சூலத்தைப் பிடித்துக் கொண்டு வா'' என்று கட்டளையிட்டார். குலிசம் அனல்மழை பொழிந்து சென்று சூலத்தின் மூன்று தலைகளையும் கவ்விக்கொண்டு அதனைக் கைதியாக்கி இழுத்து வந்தது. செவ்வேள் இரண்டாயிரம் கணைகள்விடுத்து சூரபன்மனின் வாகனமாகிய சிங்கத்தைச் சம்ஹாரம் செய்தருளினார். சூலமும் சிங்கமும் அழிந்ததைக் கண்ட சூரபன்மன் ஊழித் தீப்போல் வெகுண்டான். மாயத்தினால் ஒரு பெரிய சக்கரவாகப் பறவை வடிவத்தை எடுத்து உலகமெல்லாம் அஞ்சும்படி சிறகுகளை வீசி ஆகாயத்திலே பறந்தான்.

(சக்கரவாகப் பறவை ஆகாயத்திலேயே பிறப்பது; பூலோகத்தில் அது ஒருபோதும் தங்காது. சூரியனின் வெப்பம்தான் அதற்கு ஆகாரம். சக்கரவாகப் பறவை ஆகாயத்தில் பறக்கும்போது முட்டையிடும். அந்த முட்டை வெப்பத்தினால் பூமியை நோக்கி வரும். அவ்வாறு வரும்போதே முட்டை வெடித்துக் குஞ்சு வெளியே வந்ததும் பூமிக்கு வராமல் தாய் தந்தையிடமே ஆகாயத்துக்குப் பறந்துவிடும்).

அந்தப் பறவையின் உருவத்தைத்தான் எடுத்துக் கொண்டான். சூரபன்மன் வானத்தில் பறந்தான். தன் சிறகுகளில் கதிரவனின் ஒளியையும் மறைத்துத் திரிந்தான். கடல்போல் திரண்டிருந்த பூத சேனைக்குள் புகுந்து சிறகுகளால் அடித்தான். மூக்கினால் கொத்திச் சிலரை விழுங்கினான். முருகப் பெருமானின் தேரைச் சூழ்ந்துகொண்டு தேர்ப்பாகனைஅடித்தான். தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளைக் கொத்தினான்; பூதப்படை தலைவர்களைப் பிடித்துக் கொண்டான். இவ்வாறு சூரபன்மன ஆகாயத்தில் பறந்து திரிந்து அமர்க்களம் செய்து கொண்டிருந்தான்.

சக்கரவாகப் பறவை வடிவங்கொண்ட சூரபன்மன் மீது எம்பெருமான் பல கோடி கணைகளை விடுத்தார். அவற்றையெல்லாம் சிறகுகளாலும், அலகாலும், காலாலும் அடித்து முறித்தான் சூரபன்மன்.

'பட்சி உருவங்கொண்டவனைத் தேரோடு தொடர்ந்து செல்வது முறையன்று என்று திருவுளங் கொண்ட முருகவேள் இந்திரனை நோக்கினார். ஆண்டவனது அருட்குறிப்பை உணர்ந்த இந்திரன், நீண்ட தோகையுடைய மயில் உருவங்கொண்டு வந்து வணங்கித் துதித்தான். ''பறவை வடிவங்கொண்ட சூரபன்மன் செல்லும் இடங்களுக்கெல்லாம் சென்று போர் செய்து வெல்ல அடியேன் மீது எழுந்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டான். ஆறுமுகப் பெருமான் தேரினின்றும் இறங்கி இந்திரனாகிய மயில் மீது ஏறிக்கொண்டு சூரபன்மனாகிய சக்கரவாகப் பறவையைத் தொடர்ந்து சென்றார். (சுவாமியின் நியாய உணர்வைத்தான் பாருங்கள்.)

சிறகினால் மலைகளையும் அசைக்கும் ஆற்றல்பெற்ற சூரபன்மன், ''என்னைக் கண்டு பயந்து இந்திரன் மயில் வடிவங்கொண்டு இந்தக் குழந்தையை அழைத்து வந்திருக்கிறானே; குழந்தையைக் கொல்வதற்கு முன் மயிலைக் கொல்ல வேண்டும்'' என்று எண்ணி இந்திரனைத் தாக்கினான். மயிலும் சக்கரவாகப் பறவையும் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செய்தன. சக்கரவாகப் பறவை மயிலின் தலையில் உள்ள கொண்டையைப் பறித்து முகத்தைக் கொத்தியது. ''சுவாமி சுவாமி!'' என்று அலறினான் இந்திரன். அதனைக் கண்ட ஆறுமுகக் கடவுள் சினந்தார். கறங்குபோல் சுழன்று திரியும் சக்கரவாகப் பறவையைத் தொடர்ந்து சென்று, மார்பிலும் முகத்திலும், கால்களிலும் பாணங்களைப் பொழிந்து உடலைத் துளைத்தார். சக்கரவாகம் பதைத்துச் சிறகுகளை உதறியது. எண்டிசைகளிலும் கோபத்துடன் திரிந்தது. முருகப் பெருமான் அந்த இடங்களுக்கும் தொடர்ந்து சென்றார். முருகப்பெருமானுக்கு ஈடுகொடுக்கச் சக்கரவாகத்தினால் இயலவில்லை. வலிமை இழந்த அப்பறவை இறுதி முயற்சியாக முருகப் பெருமானின் கையில் உள்ள வில்லை முறிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் நெருங்கி வந்தது. வேலாயுதக் கடவுள் வாளை வீசிச் சக்கரவாகத்தை இருதுண்டுகளாக வெட்டி வீழ்த்தினார். வானவர்கள் வாழ்த்தினார்கள்; மகிழ்ந்து கூத்தாடினார்கள்.

[தொடரும்]



# பாண்டி நாட்டு வைணவத் திருத்தலங்கள்

**நித்திலக்கோ**

சென்ற இதழின் தொடர்ச்சி...

### 12. திருப்பேரை

மகரநெடுங்குழைக்காதர்— குழைக்காது வல்லி, நிகரில் முகில்வண்ணன்.

நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்
நாணெனக் கில்லையென் தோழிமீர்காள்!
சிகரம் அணிநெடு மாடம் நீடு
தென்திருப் பேரெயில் வீற்றிருந்த
மகரநெ டுங்குழைக் காதன் மாயன்
நூற்றுவ ரையன்று மங்க நூற்ற
நிகரில் முகில்வண்ணன் நேமி யானென்
நெஞ்சம் கவர்ந்தெனை யூழி யானே?
— திருவாய்மொழி.

ஆழ்வார் திருநகரியிலிருந்து 6 கி.மீ தொலைவு. தண்பொருநை ஆற்றின் தென் கரையில் உள்ளது நவதிருப்பதிகளுள் ஐந்தாவது.

தென்திருப்பேரையில் வாழ்ந்திருந்த கவி ஸ்ரீ நாராயண தீட்சிதர் அவர்கள் 'ஸ்ரீமகர நெடுங்குழைக் காதர் பாமாலை அந்தாதி' என்னும் பக்திப் பனுவலை, 340 ஆண்டுகட்கு முன்பு, திருநெல்வேலியில் சிறையிலிருந்த படியே இயற்றினார். இப்பனுவலைக் கேட்டு நெகிழ்ந்த, விஜய நகரத்தின் கீழ் ஆட்சி புரிந்த சொக்கநாத நாயக்கரின் திருநெல்வேலிச் சீமையின் பிரதிநிதியாகிய வடமலையப்ப பிள்ளை என்பார், இவரை உடனே விடுதலை செய்வித்து, தீட்சிதரின் நிலங்களுக்கு நிரந்தரமாக வரிவிலக்களித்தார் என்பது வரலாறு.

நம்மாழ்வாரின் 11 பாசுரங்களைப் பெற்றுகந்துள்ளது இத்தலம்.

### 13. திருவைகுந்தம்

கள்ளப்பிரான், வைகுந்தநாதன்— வைகுந்தவல்லி, பூதேவி.

எங்கள்கண் முகப்பே உலகர்கள் எல்லாம்
இணையடி தொழுதெழுந் திறைஞ்சி
தங்களன் பாரத் தமதுசொல் வலத்தால்
தலைத்தலைச் சிறந்துபூ சிப்ப,
திங்கள்சேர் மாடத் திருப்புளிங் குடியாய்!
திருவைகுந் தத்துள்ளாய்! தேவா !
இங்கண்மா ஞாலத் திதனுளும் ஒருநாள்
இருந்திடாய், வீற்றிடங் கொண்டே
— திருவாய்மொழி.

திருநெல்வேலி - திருச்செந்தூர் இரயில் பாதையில் ஸ்ரீவைகுண்டம் நிலையத்திலிருந்து 2.5 கி.மீ. தொலைவில் உள்ளது. திருநெல்வேலியிலிருந்து பேருந்திலும் செல்லலாம்.

ஆதிசேடன் குடைபிடிக்க, பெருமாள் நின்ற கோலத்தில் இருப்பது தனிச்சிறப்பு. கால தூஷகன் என்ற கள்வன், தான் திருடிய பொருளில் பாதி வைகுந்தநாதனுக்கு காணிக்கையாக்கியதாகவும் ஒரு சமயம் அரண்மனையில் திருடுகையில் பிடிபட்டு, வைகுந்த நாதனை நினைக்க, பகவான் திருடன் போல் வந்து, அரசனுக்குத் தத்துவங்களை உபதேசித்து, காலதூஷகன் திருடன் அல்லன்; யோகி என்று அரசன் நினைக்க, இறைவன் தன்னுருவைக் காட்டித் திருடனுக்கும் அரசனுக்கும், நட்புண்டாக்கிப் பின் அரசன் வேண்டியபடி, பகவான், 'கள்ளப் பிரான்' என்ற திருநாமம் பெற்றார்.

தண்பொருநை ஆற்றின் வடகரையிலுள்ள இத்தலம் நவதிருப்பதிகளுள் ஆறாவதாகும். ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிறந்தருளியதும் இத்தலந்தான். நம்மாழ்வார் 2 பாசுரங்கள் அருளிச்செய்துள்ளார்.

### 14. திருவரகுணமங்கை

வெற்றி இருக்கைப் பெருமாள்— வரகுணவல்லி. (விசயாசனர்)

புளிங்குடிக் கிடந்து வரகுண மங்கை
இருந்துவை குந்தத்துள் நின்று,
தெளிந்தவென் சிந்தை அகங்கழி யாதே
என்னையாள் வாயெனக் கருளி,
நளிந்தசீ ருலகம் மூன்றுடன் வியப்ப
நாங்கள்கூடத் தாடிநின் றார்ப்ப,
பளிங்குநீர் முகிலின் பவளம்போல் கனிவாய்
சிவப்பநீ காணவா ராயே.
— திருவாய்மொழி.

ஸ்ரீவைகுண்டத்திலிருந்துகிழக்கே தூத்துக்குடி செல்லும் சாலையில் 2 கி.மீ. தொலைவிலுள்ளது.

தாம்பிரவர்ணி நதியின் உபயதீரத்தி லுள்ள (வடகரையில்) நவதிருப்பதிகளில் ஏழாவது திருப்பதி.

நம்மாழ்வார் மேற்கூறிய ஒரே திருவாய்மொழிப் பாசுரத்தால் மங்களாசாசனம் செய்துள்ளார்.

### 15. திருக்குளந்தை (பெருங்குளம்)

மாயக்கூத்தன்— குளந்தைவல்லி.

கூடச்சென் றேனினி என்கொ டுக்கேன்?
 கோல்வளை நெஞ்சத் தொடக்க மெல்லாம்,
பாடற் றொழிய இழந்து வைகல்
 பல்வளை யார்முன் பரிச ழிந்தேன்;
மாடக் கொடிமதிள் தென்குளந்தை
 வண்குட பால்நின்ற மாயக் கூத்தன்,
ஆடற் பறவை உயர்த்த வெல்போர்
 ஆழி வலவனை யாத ரித்தே.

— திருவாய்மொழி.

திருப்புளிங்குடியிலிருந்து, அதே சாலையில் இன்னும் 9 கி.மீ. சென்று அடைய வேண்டும். ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வடகிழக்கில் 11 கி.மீ. 'ஏரல்'. பேருந்திலும் வரலாம்.

இது, தண்பொருநையின் வடகரையிலுள்ளது. நவதிருப்பதிகளுள் எட்டாவது.

இங்கு கருடனும், உத்சவராகப் பெருமாள் பக்கத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

நம்மாழ்வார் இந்த ஒரேதிருவாய்மொழிப் பாசுரத்தால் போற்றியுள்ளார்.

### 16. திருக்கோளூர்

வைத்த மாநிதிப் பெருமாள்— கோளூர் வல்லி. (நிட்சேபவித்தன்).

உண்ணுஞ்சோறு, பருகுநீர்,
 தின்னும்வெற் றிலையு மெல்லாம்
கண்ணன், எம்பெருமான்என்
 றென்றேகண் கள்நீர் மல்கி,
மண்ணி னுள்அவன் சீர்வளம்
 மிக்கவ னூர் வினவி,
திண்ண மென்னி ளமான்புகு
 மூர்திருக் கோளூரே.

— திருவாய்மொழி.

தென்திருப்பேரையிலிருந்து ஆழ்வார் திருநகரி வரும்வழியில், சுமார் 2 கி.மீ. தொலைவில், தெற்கே ஒரு கிளைப்பாதையில் திரும்பி, ஒரு கிலோ மீட்டர் சென்று இவ்வூரையடையலாம்.

இது நம்மாழ்வாரையே பாடிய மதுரகவி ஆழ்வார் பிறந்தருளிய இடம். தண்பொருநைத் தென்கரையில் இருக்கிறது. நவதிருப்பதிகளுள் ஒன்பதாவது.

நம்மாழ்வாரின் 12 பாசுரங்கள் பெற்றுள்ளது.

### 17. திருச்சிரீவரமங்கை
(வானமாமலை, நாங்குநேரி).

வானமாமலைப் பெருமாள்— சிரீவரமங்கை நாச்சியார். தோதாத்திரிநாதன், தெய்வநாயகன்.

நோற்ற நோன்பிலேன், நுண்ணறி விலேன்
 ஆகிலும் இனிஉன்னைவிட்டு, ஒன்றும்
ஆற்றகின்றிலேன் அரவின் அணைஅம்மானே
சேற்றுத் தாமரை செந்நெல் ஊடுமலர்
 சிரீவர மங்கல நகர்,
வீற்றிருந்த எந்தாய்! உனக்கு
 மிகையல்லேன் அங்கே.

— திருவாய்மொழி.

திருநெல்வேலியிலிருந்து திருக்குறுங்குடி வரும் வழியில் நாங்குனேரியில் இறங்கியோ அல்லது திருக்குறுங்குடியிலிருந்து திரும்புகையிலோ சேவிக்கலாம். நெல்லை-கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் நெல்லைக்குத் தெற்கே 32 கி.மீ. தொலைவிலுள்ளது.

இது, தானாகத் தோன்றிய தலம். இங்கு பெருமாளுக்குத்தினம் தைல அபிடேகம்உண்டு. அந்த எண்ணெயை, இங்குள்ள ஒரு பெரிய கிணற்றில் ஊற்றி விடுகிறார்கள். இந்த எண்ணெயைச் சாப்பிட்டால் எல்லா நோய்களும் நீங்குவதாக நம்பிக்கை.

இங்கேயுள்ள சடாரியில் ஸ்ரீசடகோபனின் திருவுருவம் பொறிக்கப்பட்டுள்ளது. வானமாமலை மடத்துக்குத் தலைமைப் பீடம்.

நம்மாழ்வார் 11 பாசுரங்களால் பாடியுள்ளார்.

### 18. திருக்குறுங்குடி

நின்றநம்பி, இருந்தநம்பி — குறுங்குடி வல்லி, வைணவநம்பி, திருப்பாற்கடல் நம்பி, மலைமேல் நம்பி.

நம்பி யைத்தென் குறுங்குடி நின்ற அச்
செம்போ னேதிகழும்திரு மூர்த்தியை,
உம்பர் வான வராதியஞ் சோதியை
எம்பி ரானை யென்சொல்லி மறப்பனோ?

— திருவாய்மொழி.

நாங்குனேரியிலிருந்து பேருந்து மாறி, தென்மேற்கில் 13 கி.மீ. தொலைவிலுள்ள இத்தலத்தை அடையலாம்; அல்லது களக்காடு சென்று, மற்றொரு பேருந்து மாறியும் விரைவாக வரலாம்.

இத்தலத்து எம்பெருமான் அனுக்கிரகத்தால் நம்மாழ்வார் தோன்றினார். திருமங்கையாழ்வார் திருநாட்டுக்கு எழுந்தருளிய தலம்.

பெரியாழ்வார் 1, திருமழிசையாழ்வார் 1, திருமங்கையாழ்வார் 25, நம்மாழ்வார் 13 ஆக 40 பாசுரங்கள்.

(நிறைவு பெற்றது)


சித்திரபாரதம்
கதை வடிவம் செவ்வேள்
படம் MN ராஜா
அருச்சுனன் வில்லை வளைத்து நாணொலியை உண்டாக்க, தோயமாபுரத்து அரக்கர்கள் இடிபோன்ற அதன் ஒலி கேட்டுக் காதுகளைப் பொத்திக் கொள்கிறார்கள்.
தோற்று ஓடிப்போன தேவேந்திரன் மீண்டும் நம்மோடு போருக்கு வந்து விட்டான். இம்முறை அவனை உயிருடன் விடக்கூடாது. நமது படை திரளட்டும்.!
ஏழு கடலையும் உண்டு உமிழவல்ல அம்மூன்று கோடி அரக்கர்கள், கோபத்தால் கண்கள் நெருப்பென சிவக்கப் போருக்கு வருகிறார்கள். போருக்கு வந்திருப்பது தேவேந்திரன் அல்லன்; ஒரு மானிடன் என்பதைக் கண்டு கொண்டதும் அவர்கள் ஆத்திரம் இன்னும் அதிகமாகிறது.
யாரடா நீ மானிடன்? புலிக் கூட்டத்துடன் மோத ஒரு பூனை வந்தது போல் தனியொருவனாக வந்திருக்கிறாய்?
நான் பூனை அல்லன். குருகுலத்தில் தோன்றிய வில்வீரன் அருச்சுனன். ஆற்றல் உண்டானால் வந்து என்னுடன் மோதுங்கள்.
ஓ.ஓ! அரவக் கொடி துரியோதனனிடம் நாட்டையும் செல்வத்தையும் பறிகொடுத்துக் காட்டிற்கு ஓடிய நீயா இங்கு வந்து வீரம் பேசுகிறாய்?
அரக்கரின் சொற்களை தாங்கப் பெறாத அருச்சுனன் விற்கணை தொடுத்துப் போரைத் தொடங்குகிறான்.
அருச்சுனன் தொடுக்கும் பிரம்மாஸ்திரமும், விஷ்ணுவாஸ்திரமும் காற்றும், கனலுமாகி அரக்கர்கள் கூட்டத்தைக் கலக்குகிறது. அரக்கர்கள் வாயுவாஸ்திரம் விடுக்க அதை சைலாஸ்திரம் விடுத்துத் தடுக்கிறான் அர்ச்சுனன்.
சிவந்த அம்புகள், சூலங்கள், வேல்கள், வளை தடிகள், மழுக்கள், சக்கரங்கள், வாள்கள் என அரக்கர்கள் அருச்சுனன் மேல் பல ஆயுதங்களையும் செலுத்தி ஆரவாரிக்க. அருச்சுனன் கோடிக்கணக்கான அம்புகளை ஏவி அவற்றையெல்லாம் பொடி செய்கிறான். மேலும் கோடிக் கணைகளால் அரக்கர்களின் தோள்கள், கண்கள், வாய்கள், கைகள் என உடல் முழுவதும் துளைக்கிறான்.


அரூபமும் உருப்புகள் மீண்டும் வந்து பொருந்திக் கொள்ள அரக்கர்கள் ஒருவர் கூட சாகவில்லை. அருச்சுனன் தளர்ந்து போகிறான்.
அப்போது அர்ச்சுனன் காதில் ஒலிக்கிறது ஓர் அசரீரி, "அர்ச்சுனா! பிறரைப் பரிகாசம் செய்து இவர்கள் கையினால் வாயை மூடிச் சிரிக்கும் நேரத்தில் கணை நீ தொடுத்தால் மாண்டு போவார்கள்."
மாதலி, தேரைத் திருப்பு!
தேர் திரும்பியதைக் கண்டு அரக்கர்கள் பரிகசிக்கிறார்கள்.
பயந்து ஓடுகிறான். இவன் மகா வீரனாம்! ஹ ஹ! ஹ ஹ ஹா..!
அடக்க முடியாத தம் சிரிப்பை அடக்க அரக்கர்கள் தம் கைகளால் வாயை மூட அதே நேரம் அருச்சுனனின் தேர் சரேலென முன்புறம் திரும்புகிறது. பாசுபதால் திரத்தை ஏவுகிறான் அருச்சுனன்
திரிபுரம் எரிந்து சாம்பல் ஆனதைப் போல மூன்று கோடி அரக்கர்களும் நொடியில் எரிந்து சாம்பல் ஆகிவிடுகிறார்கள்
கற்பக மலர் மாரிப் பொழிந்து அருச்சுனனைக் கொண்டாடுகிறார்கள் வானவர்கள்.




**பிரசங்கபரிமளம் ஜெயஸ்ரீ முகாம்பிகை**

''ஆடுமரவிற்றுயிலரங்கேசனருமகற்கா
நீடுந்தறியிலுதித்திலனேனிகிலப் பொருள்க
ளூடும்புரத்தினுமுண்மையெவ்வா றிவ்வுலகறியு
மீடுமெடுப்புமில்லாவொருதெய்வ
மிவனெனவே''
—திருவரங்கத்துமாலை

(படமெடுத்து ஆடுகின்ற ஆதிசேஷனிடத்தில் யோகநித்திரை செய்தருள்கின்ற அரங்கநாதன், தன் அருமை மகனாகிய (பக்தனாகிய) பிரகலாதனுக்காக, நீண்ட தூணினின்று (நரசிம்மாவதாரமாக) தோன்றியிராவிடில் தனக்கு இணையான பொருளும்,மேற்பட்ட பொருளும் இல்லாத ஒருவனேயான இறைவன் இவனேயென்று நிச்சயிக்கும்படி எல்லாப் பொருள்களிலும் உள்ளும் வெளியிலும் உளனாகும் தன்மையை இவ்வுலகம் எவ்வாறறியும்?)

திருமால் வராக அவதாரம் செய்து ஹிரண்யாட்சனைக் கொன்றார். இதையறிந்து மிக்க சினமும் துயரும் கொண்ட அவன் தமையன் ஹிரண்யகசிபு, தம்பிக்கு நீர்க்கடன்களை முறையாகச் செய்தான். தன் தம்பியைக் கொன்ற மகாவிஷ்ணுவைக் கொல்ல எண்ணி வைகுண்டம் தேடிச் சென்றான். அவன் கட்புலனுக்குப் புலனாகாமல், திருமால் அவன் உள்ளத்திலேயே உறைந்தார். உள்நோக்கற்ற ஹிரண்யனால் இறைவனைக் காண முடியவில்லை. மாபெரும் பலவானும் வீரனுமான தன் தம்பியைப் போன்று ஆகாமல், தான் மரணத்தை வென்று தன்னில் உயர்ந்தான் யாருமில்லாமல் வாழ எண்ணி மந்தரமலைக்குச் சென்று கால்கட்டைவிரலை மாத்திரம் தரையில் ஊன்றிக், கைகளை மேலே தூக்கிக் கொண்டு கடுந்தவம் செய்தான்.

ஹிரண்யன் மனைவி பெயர் கயாது. ஹிரண்யன் தவஞ்செய்ய சென்ற சமயத்தில் அவள் கருவுற்றிருந்தாள். கொடியவனான ஹிரண்யனுக்குப் பிறக்கும் மகன், தந்தைக்குப் பல மடங்காக 'தங்களை கொடுமைப்படுத்துவான் என்று எண்ணிய தேவேந்திரன் கயாதுவைத் தூக்கிச் சென்றான். வழியில் நாரதர் எதிர்ப்பட்டார். 'தேவேந்திரா! எதற்காகப் பிறர்மனைவியைக் கொண்டு செல்கிறாய்?''—என்று வினவினார்.


கொடிய அசுராம்சமாகப்பிறக்கப் போகும் இவள் குழந்தையைப் பிறந்ததும் கொன்றுவிட்டு இவளைத் திருப்பிஅனுப்பிவிடுவேன்—என்றான் இந்திரன்.

''தவறான எண்ணம்! இவள் சுமக்கும் மகன் தேவாம்சமானவன், சிறந்த விஷ்ணுபக்தன், இவன் உன்னாலோ, மற்ற எவராலோ கொல்லப்படக் கூடியவனல்ல. உண்மையில் அசுரக் கொடுமையிலிருந்து, நீங்கள் விடுபடக் காரணமாக இருக்கப்போகிறவனே இக்குழந்தை தான்'' என்றார் நாரதர்.

இதைக் கேட்ட தேவேந்திரன் தெளிவு பெற்றான். கயாதுவை வணங்கினான். செய்த தவறுக்கு மன்னிப்புக்கேட்டு, மாளிகை திரும்ப கோரினான். கயாதுவோ, மீண்டும் தன் மாளிகைக்குத் திரும்பினால், கணவனும் இல்லாத தருணத்தில், தேவர்களால் தனக்கு மீண்டும் தொல்லை ஏற்படுமோ என்று பயந்தாள், நாரத முனிவரையே தன்னைக் காக்கும்படி கேட்டுக் கொண்டாள். நாரதரும் ஒப்புக் கொண்டார். கயாது நாரதர் ஆசிரமத்திலேயே தங்கியிருந்து அவருக்குப் பணிவிடைகளைச் செய்தாள். நாரதர் அவளுக்கு திருமாலின் உயர் குணங்களை எடுத்துரைத்தார். கருவிலிருக்கும் குழந்தைக்கும் உபதேசித்தார். கயாது, தான் விரும்பும் சமயத்தில் தனக்குக் குழந்தை பிறக்க வேண்டும் என்றும், தன் குழந்தை வெகுகாலம் நலமுடன் வாழ வேண்டும் என்றும் வரம் கேட்டுப் பெற்றாள்.

தன் உடல் வலிக்கு நிகரில்லாத ஹிரண்யன், தவவலிக்கும் நிகரற்ற நிலையை எட்டினான். அவன் தலையினின்றும் புகை கிளம்பி எங்கும் பரவிற்று. கோள்களும் விண்மீன்களும் நிலை தடுமாறி விழத் தொடங்கின. பத்துத் திசைகளும் பிரகாசித்தன. பிரம்மதேவர் அங்கு எழுந்தருளினார். ஹிரண்யகசிபுவின் உடலே புலப்படாதவண்ணம் புற்றாலும் புத்ராலும் மூடப்பட்டு இருந்தது. பாம்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன. நான்முகர் கமண்டல நீரைச் சிறிது தெளித்ததும், புற்று கலைந்து அதனின்றும் மிக்க ஒளியோடு ஹிரண்யன் வெளிப்பட்டான். பிரம்மதேவரைத் துதித்தான். ''வேதாவே; வணங்குகிறேன். தங்களால் படைக்கப்பட்ட எந்த உயிராலும் எனக்கு மரணம் நேரிடக்கூடாது. வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும், இரவிலும் பகலிலும், மண்ணிலும் விண்ணிலும் ஆயுதங்களாலும் எனக்கு மரணம் நேரக்கூடாது. விலங்குகள் தேவர்கள் அசுரர்கள் மனிதர்கள் யாராலும் எனக்கு மரணம் நேரக்கூடாது. உயிருள்ள பொருள் உயிரற்ற பொருள் எதனாலும் எனக்கு மரணம் நேரிடக்கூடாது. இவ்வரங்களை எனக்குத் தந்தருளவேண்டும்'' என்றான்.

பிரம்மதேவரும்' அவ்வரியவரங்களை அருளி மறைந்தார். ஹிரண்யன் தன்னிருப்பிடம் திரும்பினான். கருவிலே திருவுடைய தெய்வக்குழந்தை பிறந்தது. அக்குழந்தையே பிரகலாதன்.



ஹிரண்யன் வலிமை வேறு எவர்க்கும் இல்லை. அவன் பூமியில் நடந்தால் பூமியைத் தாங்கும் ஆதிசேஷனும் பாரம் தாங்காமல் சிரம் நொந்து உடல் தளர்வான். தான் நீராட நதிநீர் மிகச் சிறிய அளவிலானது என்று எண்ணி அங்கு நீராடமாட்டான். அண்ட கோளத்தைத் துளைத்துக் கொண்டு ஆகாய கங்கை பெருகிவர, அதில்தான் நீராடுவான். பெருங்கடல்கள் ஏழையும் காலால் தாண்டி அப்பால் செல்வான். சூரியனின் தேர் மீதேறி சூரியனுடைய அதிகாரத்தைத் தான் செலுத்துவான். சந்திரனுடைய விமானத்தில் ஏறி சந்திர பதவியில் அமர்ந்து ஆணை செலுத்துவான். அத்தனை அதிகாரங்களையும் தன் வசமாக்கிக் கொண்ட ஹிரண்யன் யாகவேள்விகளில் தேவர்களுக்குரிய அவிர் பாகங்களையும் தானே பெற்றுண்டான். தேவர்கள் முதல்அனைவரும் ஹிரண்யனையே வணங்கும் முறையை ஏற்படுத்தினான். எங்கும் இறைவன் நாமம் மறைந்தது, ஹிரண்யன் நாமமே நிறைந்தது.

தனக்கு மேல் எவரும் இல்லை என்று வாழ்ந்த ஹிரண்யன், தனக்கு மேலுள்ள இறைவனை, தன்னுள் இருக்கும் இறைவனைத் தனக்குக் காட்ட, ஞானப்பாடம் புகட்டப் பிறந்த தனயனை, பிரகலாதனை, அறியாப் பாலகன் என்றே அறியாமையால் எண்ணி கல்வி கற்க வேண்டிக் குருவிடம் அனுப்பி வைத்தான். குரு, ''ஓம் நமோ ஹிரண்யாய'' என்று கூறிக் கல்வியைத் துவக்கி வைத்தார். பிரகலாதன் ஓம் நமோ நாராயணாய என்றான். திகைத்தார் ஆசிரியர், எவ்வளவோ எடுத்துரைத்தார், பிரகலாதன் மனதை மாற்ற முடியவில்லை.

ஒரு நாள் ஹிரண்யன், தன் மடியில் மகனை அமர்த்தி, அணைத்து உச்சி முகர்ந்து, 'மகனே, இதுநாள்வரை நீ கற்றதில் உள்ள சாரத்தை எடுத்துரைப்பாய்'' என்றான்.

''மெய்ப்பொருள் பரம்பொருளே. அவரே ஸ்ரீமந்நாராயணர். அவரை வழிபட்டால் உய்வடையலாம்'' என்றான் பிரகலாதன்.

சினத்தின் எல்லையில் கண்கள் சிவக்க உதடுகள் துடிக்க தன் மகனைக் கண்டித்தான். நன்குக் கண்டித்துப் போதிக்கச் சொல்லி குருவின் இல்லத்திற்கு அனுப்பி வைத்தான்.

சிறிது காலஞ் சென்ற பிறகு மீண்டும் தன் மகனை அழைப்பித்தான் 'குழந்தாய்! நீ கற்றதில் ஏதேனும் முக்கியமான ஒன்றைக்கூறு' என்றான்.

பிரகலாதனோ கருவில்தான் கற்ற கல்வியிலேயே குறியாக இருந்தான். மகாவிஷ்ணுவின் பெருமைகளையே மீண்டும் எடுத்துரைத்தான். அகத்தில் அன்பிழந்து, சினத்தில் அறிவிழந்த அசுர மன்னன் 'இவனைக் கொல்லுங்கள்' என்று கட்டளையிட்டான்.

அசுரர் அனேகர் பல்வகை ஆயுதங்களை ஏந்தி வந்து பிரகலாதனை வதைக்க முனைந்தனர். பிரகலாதனோ முறுவல் மாறாத வதனத்துடன், உங்களுக்குளே எனக்குள்ளே இந்த ஆயுதங்களுக்குள்ளே அனைத்திலும் பரிபூரணமாக நிறைந்திருப்பவர் நாரணர் என்பது சத்தியம். இந்தச் சத்தியத்தால் உங்கள் ஆயுதங்கள் என்மீது பாயாது' என்று கூறிக் கலங்காது நின்றான். அவர்கள் காதில் இச்சொற்கள் பாயவில்லை. ஒன்றுகூடிப் பலவகையாகத் தாக்கினார்கள். பிரகலாதனுக்குச் சிறிதும் பாதகம் ஏற்படவில்லை. அதைக்கண்ட ஹிரண்யன் தாக்குதலை நிறுத்தச் செய்தான். 'இனி மேலாவது என் பகைவனான அந்த ஹரியின் புகழ் பேசாமல் இருப்பாயாக! பயப்படாதே, உன்னைக் கொல்ல மாட்டார்கள்' என்றான்.

''யாரைச் சிந்தித்தவுடன் பிறப்பு இறப்பு மூப்பு முதலிய சகலபயங்களும் மறைந்து போகுமோ, அந்த விஷ்ணு என் உள்ளத்தில் ஒளிவீசிக் கொண்டிருக்கும்போது எனக்குப் பயமேது?'' என்று பிரகலாதன் கலங்காது கூறவும் ஹிரண்யன் அடக்கமாட்டாத ஆக்ரோஷத்தோடு நாகங்களைக் கூப்பிட்டுக் கடிக்கக் கட்டளையிட்டான். கொடியபாம்புகள் பிரகலாதனின் உடல் முழுதும் சீறிச்சீறிக் கடித்தன. தேகத்தை மறந்து தெய்வச் சிந்தனையில் தன்னை மறந்திருந்தான் அவ்வசுர மைந்தன். கடித்துக் கடித்து விஷப்பாம்புகளின் பற்கள் தான் ஒடிந்தன. அவற்றின் படங்களிலே அனல் கிளம்பிற்று. தலையிலுள்ள இரத்தினங்கள் வெடித்தன. பாம்புகள் பயந்து பின் வாங்கின.

பெறுதற்கரிய மகனைப் பெற்றும், பெருமை உணராப் பேதை ஹிரண்யன் திசை யானைகளை அழைத்துப் பிரகலாதனைக் கொல்லக் கட்டளையிட்டான். மலைச் சிகரங்களைப் போன்ற தம் தந்தங்களைக் கொண்டு பிரகலாதன் மார்பில் அவை குத்தின. ஹரி நிலையமான மார்பை அவற்றால் பிளக்க முடியவில்லை. மாறாக தந்தங்கள் முறிந்து பொடித்துப் போயின.

பாலகன் தந்தையை ஏறிட்டான். ''தந்தையே! இது என் பலத்தால் நிகழ்ந்ததா? இல்லை. இறைவன் இன்னருளால் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்!''

இந்த இறை சித்தாந்தம் ஹிரண்யன் கோப நெருப்புக்கு, நெய்வார்த்துக் கொழுந்து விட்டெரியச் செய்தது.

உள் நெருப்பு வெளி நெருப்பை ஏவியது. 'அசுரர்களே, பெரும் நெருப்பை வளர்த்து இவனைப் போட்டு எரியுங்கள்' என்றுகட்டளையிட்டு, வாயுவைக் கூப்பிட்டு, 'இந்நெருப்பைப் பிரகாசிக்கச் செய்' என்றான்.

பெருங்குழியிலே விறகுகளை மலைபோல அடுக்கி, குடங் குடமாக எண்ணெயும் நெய்யும் சொரிந்து, நெருப்பு மூட்டினார்கள். தீ வானளாவ எரிந்தது. விண்ணவர் துடித்து அழும்படியாக பிரகலாதனைத் தூக்கி அந்நெருப்பில் போட்டார்கள். ஹரியை மறவா நெஞ்சினன் சாம்பலாகவில்லை; மாறாக தாமரை மலர்க் குவியலில் இருப்பது போல் குளிர்ச்சியாக உணர்ந்தான்.

அப்போது அங்கு ஹிரண்யனுடைய புரோகிதர்களான சண்டன், அமர்க்கன் என்போர் வந்தனர். இவர்கள் சுக்ராச்சாரியாருடைய புதல்வர்கள். அவர்கள் ஹிரண்யனைச் சமாதானப்படுத்தின. 'பெற்றமகனிடம் பகைமை பாராட்டுவது முறையன்று. இவனை எங்களிடம் ஒப்படையுங்கள். நாங்கள் இவனுக்குக் கல்வி கற்பிக்கிறோம். எங்கள் முயற்சிக்குப் பின்னும் இவன் ஹரிபக்தனாக இருப்பானாகில் இவனைக் கொல்லும் செயலை நாங்களே செய்கிறோம்' என்றனர்.

ஹிரண்யனுக்கும் மனமிளகியது; பெற்ற பாசம் வெளிப்பட்டது. சுடுநெருப்புக்கு நடுவேயிருந்து பிரகலாதனை இழுத்துவரச் செய்தான். மீண்டும் குருகுலவாசம் தொடங்கியது பிரகலாதனுக்கு அங்கே. குரு வெளியே சென்றுவிடும் நேரங்களில் பிரகலாதன் குருவானான். அசுரச் சிறுவர்களுக்கு ஹரிபக்தியை உபதேசித்தான். ஆசிரியர்களால் தன் மகனைத் திருப்ப முடியாததையும், தன் மகனால் எதிர்காலத்தில் அசுரகுலமே திசை திரும்பிவிடக்கூடிய அபாயத்தையும் அறிந்த ஹிரண்யன், அவனைப் பெற்ற தாயைக் கொண்டே, கட்டாயப்படுத்தி நஞ்சு கலந்த உணவை கொடுக்கச் செய்தான். கதறிய தாயை சமாதானப்படுத்தி ''மருத்துவர்க்கெல்லாம் மருத்துவனான மகாவிஷ்ணு என்னுள் இருக்கும்போது இக்கொடிய நஞ்சும் மாமருந்தாகும்'' என்று கூறி அதை உண்டான். விஷம் பிரகலாதன் முன் வீரியத்தை இழந்தது. அன்றலர்ந்த மலராக பொலிந்தான் பிரகலாதன்.

ஹிரண்யன், 'மந்திரபலத்தால், பயங்கர பூதத்தை உருவாக்கி இவனைக் கொல்லுங்கள்' என்று குருமார்களுக்குக் கட்டளையிட்டான்.

மாயையில் உழலும் அக்குருமார்கள் பிரகலாதனுக்கு மீண்டும் பலவாறு அறிவுரை கூறினார்கள். பரம்பொருளை உணர்ந்த பிரகலாதன் 'ஹரியே அனைத்தும்' என்று அவர்களுக்கு எடுத்துரைத்தான். வெகுண்ட அவர்கள் மந்திரங்களை உச்சரித்து பயங்கரமாக தீச்சுவாலை வீசும் ஒரு பூதத்தை உருவாக்கினார்கள். அது பூமி நடுங்க வந்தது, சூலத்தால் பிரகலாதன் மார்பில் குத்தியது. சூலம் பொடியானது. ஏவப்பட்டவனைக் கொல்ல முடியாததால், அப்பூதம் ஏவியவர்கள் மீதே பாய்ந்தது. பிரகலாதன் அவர்களுக்கு அணையாக நின்றான். ''பெருமானே, இவர்களைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று பிரார்த்தித்தான். பூதம் மறைந்தது.

குருக்கள் இருவரும் பிரகலாதனை ஆசீர்வதித்து, ஹிரண்யனிடம் சென்று நடந்ததைக் கூறினார்கள். ஹிரண்யன் திகைத்தான். தன் மகனையே அழைத்து, உன்னுடைய அற்புதமான இந்தப் பிரபாவத்திற்கு என்ன காரணம்? என்று வினவினான்.

''தந்தையே! என்னுடைய இந்தப் பிரபாவம், மந்திரத்தாலோ தந்திரத்தாலோ உண்டானதல்ல. பக்தி ஒன்றினாலேயே உண்டானது''—என்று கூறி அனைத்தும் தானேயான இறைவனின் பெருமைகளை எடுத்துரைத்தான் பிரகலாதன். அதைக் கேட்டு ஹிரண்யனிடமிருந்து பீறிட்டு வெளிப்பட்ட சினத் தீயில் அக்னிதேவனும் அலமந்தான்; சூரியனும் சுழன்றான்: நூறு யோசனை உயரமுள்ள மலையினின்று பிரகலாதனை கீழே தள்ளச் செய்தான் ஹிரண்யன். உருண்டு புரண்டு வந்த மகனை, தரணித் தாய் தன் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டாள்.

'அம்மா! என்னைப் போலவே, குழந்தைகள் உன்மடிமீது விழும்போது, அவர்களுக்கு அடிபடாமல் நீ காக்க வேண்டும்' என்று தன்னலமில்லா பிரகலாதன் பூதேவியிடம் வரம் பெற்றுகொண்டான்.

சுகமாய் எழுந்து வந்த மகனைக் கண்டும் மனம் மாறாத ஹிரண்யன் மிக்க மாயாவியான சம்பராசுரன் என்பவனை அழைத்து, பிரகலாதனை எப்படியேனும் கொல்லும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தான். அவன் அனேக மாயைகளைப் பிரகலாதனை நோக்கிப் பிரயோகித்தான். எம்பெருமானின் சுதர்சன சக்கரம் புறப்பட்டு வந்து மாயைகளையெல்லாம் தகித்துச் சாம்பலாக்கியது. இதற்கு பின்னும் ஹிரண்யனுக்கு மனமயக்கம் தீரவில்லை. சம்சோஷகம் என்னும் வாயுவை ஏவினான். அதுவும் அழிந்தது. அனைத்துலகும் தான் ஆண்டாலும், தனயனை ஆளமுடியாமல் அழிக்கவும் முடியாமல் தோற்றான் ஹிரண்யாசுரன்.

பின் பிரகலாதனுக்கு மீண்டும் குருகுல வாசம் தொடங்கியது. ஆசிரியர்கள், அரசாளும் நீதிநெறிகளை விளக்கும் சுக்ர நீதி சாஸ்திரத்தைப் போதித்து ஹிரண்யனிடம் அழைத்து வந்தனர். ஹிரண்யன், மகன் திருந்தி விட்டான் என்று எண்ணினான். அரசு செலுத்த வேண்டிய நீதிமுறையை விளக்குமாறு கேட்டான்.

பழையகதை திரும்பியது. பரமாளும் நீதிநெறியை புகன்றான் பிரகலாதன். காதில் நாராசம் பாய, சிம்மாசனத்தினின்றும் சீறி எழுந்து, மைந்தனை அறைந்து தள்ளி, 'நாக பாசங்களால் இவனைக் கட்டி சமுத்திரத்தில் தூக்கிப் போடுங்கள்' என்று கட்டளையிட்டான்.

அவ்வாறே செய்யப்பட்டதும், கடல் நீர், பொங்கி எல்லையைக் கடந்தது. சமுத்திரத்தில் மூழ்கியிருக்கும் அவன் மீது மலைகளை வைத்து அடுக்குங்கள் என்றான் ஹிரண்யன். அவ்வாறே அசுரர்கள் பெரிய பெரிய மலைகளைப் பெயர்த்துக் கொண்டு வந்து சமுத்திரத்தில் ஆயிரம் யோசனைக்கு அடுக்கினார்கள். சமுத்திர அரசன் பிரகலாதனை எவ்வித ஊறும் ஏற்படாமல் அழைத்துச் சென்றார் தன் மாளிகைக்கு; பல உபசாரங்களைச் செய்தார். பிரகலாதன் பரமனையே துதித்து நின்றான்.

**அஞ்சுவது யாதொன்று மில்லை**
**அஞ்ச வருவதும் இல்லை**

**—திருநாவுக்கரசர்**

பெருமான் காட்சி கொடுத்தார். பிரகலாதன் பலப்பல கூறிப்போற்றிப் புகழ்ந்தான். ''குழந்தாய்! வேறு எதையும் விரும்பாமல் என்னையே எப்போதும் ஏகாக்ரசிந்தையாக தியானித்து வந்ததால் என்னைத் தரிசிக்கும் பேறு பெற்றாய்! உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்!''—என்றார் திருமால்.

''பேரருளாளனே! என் மனத்தினின்றும் தாங்கள் என்றும் நீங்காமல் நிலைத்திருக்க வேண்டும்.''

''அத்தகுநிலை உனக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கிறது. அது மேலும் அபிவிருத்தியாகும். மேலும் வேறு வரங்களைக் கேள்''

''எம்பெருமானே! தங்களிடம் பகைமை கொண்டு தகாதது செய்யும் கொடியவராயினும் என் தந்தைக்குத் தாங்கள் அனுக்ரஹம் செய்ய வேண்டும். அவர் எனக்குச் செய்த கொடுமைகளால் ஏற்பட்டுள்ள பாவங்களையும் மற்ற பாவங்களையும் தாங்கள் நசிக்கச் செய்ய வேண்டும்.''

''அப்படியே ஆகட்டும்! என்னருளால் நீ மோட்சத்தைப் பெறுவாய்!''—என்றருளி மறைந்தார் பகவான்.

பிரகலாதன் மீண்டும் நகரத்திற்கு வந்து தன் தந்தையை வணங்கி நின்றான்.

கொடுமைகள் பல புரிந்தும், குணம் மாறாமல் உயிர் பிரியாமல் நிற்கும் மகனைக் கண்டு ''யானே அவனுடைய உயிருண்பல்'' என்று வெகுண்டு, வான் ஏழும் நடுங்குமாறு மகனிடத்தே வந்தான்.

''தந்தையே, என்னைத் தாங்கள் கொல்ல எண்ணுவீரேயானால் இவ்வுயிர் உம் வழிப் பட்டது அன்று, இந்த உலகம் அனைத்தையும் ஒருங்கே படைத்தவர் கொள நின்றது''—என்றான் பிரகலாதன்.

உலகைப் படைத்தவனா? யார் அவன்? என்னுடைய திருப்பெயரைத் துதித்து வாழ்கின்ற மும்மூர்த்திகளா? முனிவர்களா? அனைத்தையும் என்னிடம் தோற்றுவிட்ட தேவர்களா? மதிகெட்டவனே, என்னை மதியாமல் யாரைப் போற்றுகிறாய், காட்டு!—என்றான் ஹிரண்யன்.

''எந்தையே! மலரில் மணமும், எள்ளில் எண்ணெயும் போல் எங்குமுள்ள, அளவிலாத

பொருள்கள் அனைத்திலும் கலந்து நிறைந்திருக்கின்ற திருமாலையே யான் கூறுகிறேன்.'

''குலத்தைக் கெடுக்க வந்தவனே, என்னை கண்டு ஓடி ஒளிந்த கோழையைப் புகழ்ந்து, பெற்ற தந்தையான என்னை எதிர்த்து நிற்கிறாயா? ஹூம்.. எங்கும் இருக்கினானா? அப்படியாயின் இத் தூணில் இருக்கிறானா?!''

''தந்தையே! நான் கூறிய பெருமானை- உங்களுள்ளும் என்னுள்ளும், எல்லோருள்ளும் எங்கும் நிறைந்துள்ள பெருமானைத் தங்கள் அறியாமையால் பழிக்கிறீர்கள். அவர் சாணிலும் இருக்கிறார். அணுவை நூறுகூறாகப் பிளந்து பார்த்தால், அச்சிறு கூறிலும் இருப்பார்; தாங்கள் பேசிய இகழ்ச்சி மொழிகளிலும் இருக்கிறார்; இதோ இந்தத் தூணிலும் இருக்கிறார்!''

''சாணிலும் உளன் ஓர் தன்மை அணுவினைச் சதகூறிட்ட
கோணினும் உளன் மாமேருக்குன்றினும் உளன் இந்நின்ற
தூணினும் உளன் நீசொன்ன சொல்லினும் உளன் இத்தன்மை
காணுதி விரைவில் என்றான் நன்றெனக்கனகன் சொன்னான்''

''தேவர்களுக்கும் உனக்கும் ஒத்த நண்பனாய் இவ்வுலகெங்கும் வியாபித்திருக்கின்ற அவனை இத்தூணிடத்தில் காட்டு! இல்லையேல், யானையைக்கிழிக்கும் சிங்கம்போல உன்னைக் கிழிப்பேன்!'' என்று சீறிய ஹிரண்யன் கையை முஷ்டியாக்கித் தூணில் குத்தினான்.

உடனே அத்தூணிலிருந்து பயங்கரமான ஓசை எழுந்தது. அதைக்கேட்டு பிரம்மாதி தேவர்களும் நடுங்கினார்கள். ஹிரண்யன் திகைத்தான். அந்தத்தூணில் நரசிம்மப் பெருமான் காட்சி கொடுத்தார். சிங்கமுகம், மனித உடல்; உருக்கிய தங்கமாகக்கண்கள் பிரகாசித்தன. முகத்தில் சடைகளும், பிடறி முடிகளும் தென்பட்டன; அனேக கரங்கள்; வாய் குகையைப் போல் இருந்தது; ஒடுங்கிய இடை பருத்த கழுத்து; நீண்ட ஆயுதம் போன்ற நகங்கள்; கத்திபோல் கூர்மையான நாக்கு; இடிபோன்ற கர்ஜனை.

இவ்வுருவைக் கண்டவுடன் பரமாத்மாவே இவர் என்று ஹிரண்யனின் உள் மனத்திற்குப் புரிந்து விட்டது. வெறுப்பு மேலும் வளர்ந்தது. கதையை ஓங்கிக்கொண்டு நரசிம்மரைத் தாக்க பாய்ந்தான். அவர்தம் கர வளையத்துள் சிக்கினான். நழுவி வந்து, கத்தி கேடயம் எடுத்துக் கொண்டு மீண்டும் தாக்கினான்.

ஹிரண்யனை நழுவவிட்ட நரசிம்மர், அவன் தன்னைத் தாக்குவதையும் அனுமதித்தார், காரணம் பிரகலாதன் சொல்லை சத்தியமாக்கவும், உயிரைக் காக்கவும் உடனே நரசிம்மமாக வெளிப்பட்டாலும், சந்தியாகாலம் வருவதற்காகச் சிறிது காத்திருக்க வேண்டியிருந்தது. அந்த இடை நேரமே யுத்த நேரமாக மிகுந்தது. சரியான தருணம் வந்ததும். ஹிரண்யனைத் தூக்கிச் சுழற்றிய பகவான் வாயிற்படியில் அமர்ந்து, அவனைத் தன் மடி மீது போட்டுக் கொண்டு நகங்களால் அவன் மார்பினைக் கிழித்துக் கொன்றார். பெருகிய இரத்தத்தைப் பருகி, கர்ஜனை புரிந்து, ஹிரண்யனின் மாமிசம் நரம்பு முதலானவற்றை மாலையாகத் தரித்துக் கொண்டு, ஹிரண்யனின் அரியணையில் அமர்ந்தார்.

ஹிரண்யன் நான்முகரிடமிருந்து பெற்ற வரத்திற்கு மாறுபாடின்றி அவனைக் கொல்கிறார் நரசிம்மமூர்த்தி.

மனிதனாலோ, பிராணிகளாலோ தனக்கு மரணம் நேரிடக் கூடாது என்று வரம் பெற்றிருப்பதால் இரண்டுமற்ற, புதிதான நரசிம்மமாகத் தோன்றினார். இவர் பிரம்மதேவரால் படைக்கப்பட்ட உயிரும் அல்ல.

இரவிலும் பகலிலும் மரணமில்லை என்று வரம் பெற்றிருப்பதால் இரண்டுமற்ற சந்திக் காலத்தில் கொன்றார்.

வீட்டிற்கு உள்ளும் வெளியிலும் மரணமில்லை என்பதற்கேற்ப இரண்டுமற்ற வாயிற்படியில் கொன்றார்.

மண்ணிலும் விண்ணிலும் இன்றி மடியில் வைத்துக் கொன்றார்.

உயிரற்ற பொருள், உயிருள்ள பொருள் எதனாலும் மரணம் நேரிடக் கூடாது என்று வரம் பெற்றிருப்பதால், தன் கூரிய நகங்களால் கொல்கிறார். நகத்திற்கு உயிர் உண்டு, வளர்கிறது; உயிரில்லை, வெட்டும்போது உணர்ச்சியில்லை.


பிரம்மவரத்திற்கு ஊறு நேராமல் பிரகலாத வாக்கை மெய்ப்பித்து, சினம் தணியாமல் சிங்காதனத்தில் அமர்ந்திருந்த நரசிம்மரைக் கண்டு பிரம்மாதி தேவர்களும் பயந்தனர்; திருமகளும் திகைத்தாள். பிரஹலாதனே நெருங்கிச் சென்று துதிக்க, நரசிம்மமூர்த்தி சினந்தணிந்து தன்னிலை மீண்டார். பிரகலாதனை, அவ்வரியணையில் அமர்ந்து அரசாளப் பணித்தார்.

''அளந்திட்ட தூணை அவன் தட்ட வாங்கே
வளர்ந்திட்ட வாளுகிர்ச்சிங்கவுருவாய்
உளந்தொட்டிரணியனொண் மார்பகலம்
பிளந்திட்டகைகள்''. -பெரியாழ்வார்.

''விண்டிடுதூணினெழுந்தொழிலார் நரமீளி வளர்ந்தசெய்
லெண்ட வரானு முணர்ந்தறிதற்கரி தென்றிடில்யாரறிவார்
அண்ட முகட்டின் வயங்கியமர்ந்திடுமாதியிவ் வரியினொளிர்
மூண்ட கவுந்தியின வந்தது போன்றனை முடிவுவரைதற்கெளிதோ.''

— மகாபாகவதம்.

# கீதைக் குறள்கள்



**அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்**

**சென்ற இதழ் தொடர்ச்சி...**

இன்பத்தை நாடாது துன்பத்தில ஏங்காது
வன்சினமும் அச்சமும் நீக்கு (2]56)

இன்பம்போல் துன்பத்தை ஏற்கும் மனமுடையோர்
மன்னும் அறிவுடைய ராம். (2]57)

உள்ளிழுக்கும் ஆமை உடலுறுப்பை; மெய்ஞ்ஞானி
உள்ளடைப்பர் ஐம்பொறியை வென்று (2[58)

புலனடக்கம் பெற்றபின்பும் பூர்வஆசை தோன்றின்
சலனமற்ற மெய்ப்பொருளை நாடு (2[59)

நல்லறிஞன் தன்மனத்தை நன்றடக்க எண்ணினும்
கொல்புலன்கள் தேய்க்கும் அதை. (2[60)

ஐம்பொறியை வென்றோன் அறிவு நிலையான
செம்மை யுடையதெனக் கொள். (2[61)

புறப்பொருள் வேட்கையில் பூப்பதே ஆசை:
பிறக்குமதில் வேண்டாச் சினம் (2[62)

கோபத்தால் தோன்றும் குழப்ப மயக்கங்கள்
ஆபத்தாய்க் குன்றும் அறிவு. (2[63)

மனவடக்க முன்னோர் மனங்கொள் பொருளால்
கணமேயும் தாக்குறார் காண். (2[64)

அமைதியால் துன்பம் அகன்றிடும் மற்றும்
அமையுமாம் ஒன்றும் அறிவு (2[65)

மனவடக்கம் ஆத்மபோ தம்தியானம் மங்கிடின்
மனச்சாந்தி இன்பங்கிட் டாது. (2[66)

கப்பலைக் காற்று தள்ளுதல்போல் புத்தியைத்
தப்பாது தாக்கும் புலன். (2[67)

வில்வீரா! ஐம்புலன் வென்றிடின் உன்அறிவு
வெல்லரிதாய் நிற்கும் நிலைத்து. (2[68)

எப்பொருளும் மெய்ப்பொருளாம் யாவர்க்கும்; ஞானிக்கோ
அப்பொருள் பொய்ப்பொருளாம் (2[69)

கலந்து நதிகள் கடலுள் அடங்குதல்போல
மலரும் ஆசையை அடக்கு. (2[70)

நான்எனது என்பதற்று நச்சும் அவாவுமிலான்
வானமைதி பெற்றிடுவான். (2[71)

இறுதிநேரத்திலேனும் இந்நினைவு தோன்றின்
பெறுவர் பிரும்ம நிலை. (2[72)

செய்யும் வினைகளை யோகமெனக் கொள்ளுதல்.

(கர்ம யோகம்)

"பரந்தாமா! செய்கையைக் காட்டிலும் புத்தியே உயர்ந்தது என்றால், ஏன் என்னை இக்கொடிய செய்கையை செய்யச் சொல்கிறாய்?

உன் குழப்பமான பேச்சு என்னை மயக்கமுறச் செய்துவிட்டது. உறுதியான ஒரே வழியை எனக்குக் கூறுவாயாக" என்று கேட்டான் அருச்சுனன். (3[1, 2)

கண்ணபிரான் கூறுகிறார்:

இருவழி கள்உண்டாம் இவ்வுலகில் ஞானம்
கருமம் எனவகுத்தேன் நான். (3[3)

தன்வினையைச் செய்யானும் சந்யாசம் பூண்டானும்
தன்மையால் பற்றிலனாம் காண். (3[4)

முக்குணத் தின்குணமே மூன்றுவகைச் செய்கைகளாம்;
அக்குணங்கள் இல்லாதோர் யார்? (3[5)

கருமஞ்செய் ஐம்பொறியும் கட்டுண்டால் போதாது
பொருந்திட வேண்டும் மனம். (3[6)

மனத்தால் ஐம்புல வாழ்வை அடக்கி
அனைத்திலும் பற்றற்று வாழ். (3[7)

உன்னுடைய நாட்கடனை உற்றவகை செய்க;
அன்றாகின் யாக்கை கெடும். (3[8)

வேள்வி தவிர்த்த வினைகள் தளையேயாம் ;
வேள்விகளைப் பற்றற்றுச் செய். (3[9)

மலரோனே வேள்வியை மக்களைப் படைத்தோன்;
நலந்தரும் வேள்வியைப் போற்று. (3[10)

வானோரை வேள்வியால் வாழ்த்தினால் ஈடாக
வானோரும் நன்மைசெய் வர். (3[11)

—(தொடரும்)

# லிங்கபுராணம்

**டாக்டர் இரா. நாகசாமி**
**தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் (ஓய்வு)**

## (1)

பாயிரம்

கி பி 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அப்பர் பெருமான் தமது தேவாரப் பதிகத்தில்

''லிங்கபுராணத்துள்ளானை'' என்று குறிக்கிறார். ஆதலின் அவர் காலத்துக்கும் முன்பிருந்தே லிங்கபுராணம் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கியிருந்தது என்பதில் ஐயமில்லை. வியாஸ முனிவர் இயற்றிய பதினெண்புராணங்களில் லிங்கபுராணம் சைவர்களுக்கு மிகவும் இன்றியமையாத ஒன்று. சமஸ்கிருதத்தில் உள்ள லிங்கபுராணம் நமக்கு கிடைத்துள்ளது. சமஸ்கிருத லிங்கபுராணத்தைப் பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் உண்டு. அவற்றில் பேராசிரியர் வி.எஸ். அகர்வால் கருத்துக்கள் மதிக்கப் பெறுபவை. இப்பொழுதுள்ள லிங்க புராணம் இரண்டு பகுதியாக உள்ளது. அகர்வால் கருத்துப்படி முதற்பகுதி கி.பி. முதலிரண்டாம் நூற்றாண்டை சார்ந்தது. இரண்டாம் பகுதி கி.பி. நான்காம் நூற்றாண்டில் குப்தர் காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்கிறார். எது எப்படி இருப்பினும் இப்புராணம் அப்பருக்கு (கி.பி. 600) காலத்தால் முற்பட்டது என்பதில் ஐயமில்லை. ஆதலின் இது நமது கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பது தவறல்ல.

இப்பொழுதல்ல. சுமார் 400 ஆண்டுகளுக்கும் முன்னதாகவே தமிழ்நாட்டில் இது சிறந்த கவனத்தை பெற்றிருந்தது எனலாம். லிங்க புராணத்தை ஏறக்குறைய கி.பி. 1,600 இல் ஆண்ட வரகுணராமபாண்டியனாகிய குலசேகரன் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். இம்மொழிபெயர்ப்பு 1876-ம் ஆண்டு அச்சிடப்பட்டுள்ளது. இதனை சிவகாஞ்சி மயூராசல பொம்மையபாளையம், பெரியமடம் யதீஸ்வர கர்த்தரான ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் கட்டளையிட்டருளியபடி கொன்ற மாநகரம் சண்முகசுந்தர முதலியாரால் பரிசோதித்து வே.குமாரசுவாமி ஐயரால் சென்னை தண்டையார் பேட்டை இலட்சுமி விலாஸ அச்சுகூடத்தில் தாதுவருஷம், ஆனி மாதம்பதிப்பிக்கப்பட்டது என அப்பகுதிப்பின் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ''இலிங்க புராணம் இஃது குலசேகர பாண்டியர் வடமொழியினின்று மொழி பெயர்த்தருளியது'' என்ற தலைப்பு காணப்படுகிறது.

இதன் சிறப்புப் பாயிரம் ஒன்றும் அச்சிடப்பட்டுள்ளது.

''பூண்ட பேரன்பால் புவிபுகழ் லிங்கபுராணம்
 நான்மறை வகுத்திசைத்த
காண்டமும் முனிவனுரைத்தவாறு அமுது
 கனிந்தசெந்தமிழினால்விரித்தான்
நீண்ட நீராழி நெடுநில வளாகம் தன்நிழல்
 மதிக் கவிகைப்
பாண்டிய குலசேகரன் இகல்கடந்த
 பருதிவேற் றடக்கை மீனவனே.''

என பாயிரமும் காணப்படுவதால்

''செந்தமிழால் விரித்தான்'' என்பதால் இது மொழிபெயர்ப்பா அல்லது குலசேகரன் தானாக இயற்றினானா என்ற ஐயம் தோன்றக் கூடும். தமிழ் இலிங்க புராணத்தைப் பற்றி மு. அருணாசலம் அவர்கள் சிறக்க ஆய்ந்து தமது தமிழ் இலக்கிய வரலாற்றில்-(பதினாறாம் நூற்றாண்டு முதற்பாகத்தில்) எழுதியுள்ளார். அவருக்கு இந்த ஐயம் இருந்தது போலும்! தமிழ் லிங்கபுராணத்தை சமஸ்கிருத லிங்கபுராணத்துடன் அவர் ஒப்பிட்டு பார்க்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை எனத் தோன்றுகிறது.

ஆதலின் இனிவரும் பக்கங்களில் இரு இலிங்க புராணங்களையும் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. முதலிலேயே ஒன்று குறிப்பிட்டுவிட விரும்புகிறேன். இரண்டு நூல்களையும் பார்த்த பின்னர் ஒன்று தெளிவாகிறது. தமிழ் இலிங்கபுராணம் சமஸ்கிருத லிங்கபுராணத்தின் நேர் மொழி பெயர்ப்புதான் என்பதில் சந்தேகமே இல்லை.

வடமொழி இலிங்கபுராணம் பூர்வ பாகம் உத்தரபாகம் என இரண்டு பாகமாக உள்ளது எனக் கண்டோம். தமிழ் இலிங்க புராணமும் இரண்டு பாகமாக பூர்வகாண்டம் உத்தர காண்டம் என்றே காணப்படுகிறது. இருகாண்டங்களிலும் அத்தியாயங்களுக்கு தலைப்புகள் காணப்படுகின்றன. இத்தலைப்புகளும் ஒன்று போலவே இரு நூல்களிலும் பெரும்பாலும் காணப்படுகின்றன.

''நாரதன் நைமிசாரண்யம் அடைந்தது தொடங்கி கண்ணன் பாகவத விரதமுரைத்த அத்யாயத்தோடு 108 அத்யாயங்களில் முதல். காண்டம் முற்றுப் பெறுகிறது. இதே அமைப்பு தான் சமஸ்கிருதத்திலும் உள்ளது. இரண்

டாவது காண்டம் கௌசிகன் கதையில் தொடங்கி யோக முரைத்ததுடன் முற்றுப் பெறுகிறது. இரு நூலகளின் அமைப்பும் இங்கும் ஒன்றாகவே உள்ளன. உள்ளே இருக்கும் செய்திகளின் தொகுப்பும் ஒன்று போலவே உள்ளதால் தமிழ் இலிங்க புராணம் சமஸ்கிருத லிங்க புராணத்தின் மொழிபெயர்ப்புத்தான் என்பதில் ஐயமே இல்லை. இதை அத்தியாய அத்தியாயமாக நிரூபிக்கலாம்.

தமிழ் இலிங்கபுராணம் அரியதொரு செய்தியைத் தருகிறது. முதல் காண்டத்தில் 108அத்தியாயங்கள்என்றும் இரண்டாம் காண்டம் 46 அத்தியாயங்கள் என்றும்ஆகமொத்தம் 154 அத்தியாயங்கள் என்றும்குறிக்கிறது.இதை ஒரு பாடலே குறிக்கிறது.

''இலிங்க புராணத்தை இயல்
பதினோராயிரமாக ஏத்துமாறு
துலங்கு பூருவகாண்டம் நூற்றெட்டு
அத்யாயமாய தொழுது கேட்டோர்
நலங்கிளர் உத்தரகாண்டம் நாற்பத்தாறென
நவிலத்தியாயமாக
வலங்கு சுடர் முத்தலைவேல் அண்ணலடி
தொழுது நுமக்கறியச் சொன்னோம்.''

இந்தப் பாடல் இப்புராணத்தின் இறுதி அத்தியாயத்தில் காணப்படுகிறது. இதில் ஒரு சிறப்பு யாதெனில் சமஸ்கிருத இலிங்க புராணத்திலும் இறுதியில் இதே கருத்து சொல்லப்பட்டுள்ளது.

அஷ்டோத்தர சதாத்யாயம்
ஆதிமாம்சமத; பரம்
ஷட்சத்வாரிம்சத் அத்யாயம்
தர்மகாமார்த்த மோட்சதம்''

அஷ்டோத்ரசதம் எனில் 108 எனப் பொருள். அத்யாயம்-108 அத்யாயம். ஆதி மாம்சம். முதல் பகுதி; அத: பரம்-அதன் பின் பகுதி, ஷட்சத்வாரியம்சத் அத்யாயம்-48 அத்யாயம்] இதிலிருந்து இந்த சமஸ்கிருத செய்யுளின் மொழி பெயர்ப்பு தமிழ் என்பது புலனாகும். சமஸ்கிருதத்திலும் 108— 48 156 அத்தியாயங்கள் தானிருக்க வேண்டும். முதல் பாகத்தில் குறித்தது போல் 108 அத்யாயங்கள் இன்றும் காணப்படுகின்றன. இரண்டாம் பாகத்தில் 55 அத்யாயங்கள் இப்பொழுது காணப்படுகின்றன. இதிலிருந்து 7 அத்தியாயங்கள் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிகிறது. வடமொழி நூலை அச்சிட்டவர்கள் இந்த குறைபாட்டை கவனித்துக் குறித்துள்ளார்கள்.

தமிழ் மொழி பெயர்ப்பிலிருந்து கி.பி. 1600-இல் 156 அத்தியாயங்கள்தான் சமஸ்கிருதத்திலும் இருந்தன என்பது தெளிவு. ஆதலின் வடமொழி நூலுக்கு திருத்தியபதிப்பு கொண்டு வரவேண்டுமென்றால் அதற்கு தமிழ் நூல் பெரிதும் பயன்தரும் என்பதும் குறிக்கத் தகுந்தது.

—(தொடரும்)

# வாசகர்



# எண்ணங்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆலய நிர்வாக வாரியம் பற்றிய சிறப்புரைகளை உடனுக்குடன் சிறப்பாக வெளியிட்டுத் 'திருக் கோயில்'' இதழைப் பொலிவுபடுத்தியிருந் தீர்கள்.

—இரா. மோகன்,
திருச்செங்கோடு,

அறநிலையத் துறையை மேம்படுத்தும் ஆர்வத்துடன் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் எண்ணி எண்ணித் திட்டமிட்டுச் சிறப்புறச் செயலாற்றி வருகிறார்கள். மாண்புமிகு முதல்வரை ஒவ்வொரு தமிழ்க்குடிமகனும் போற்றிப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

—கு. இராமநாதன்,
செங்கற்பட்டு

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமந்திரச் செம்மல் திருமிகு டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ். அவர்கள் எண்வகை யோகம் பற்றிய அரிய கருத்துகளை மிகச் சிறப்பாக விவரித்திருந்தார்கள். அவருடைய ''அருளாளர்களின் அருள் உள்ளம்'' கட்டுரைத் தொடர் மிக அற்புதம்.

—ஆர். அருணாசலம்,
மதுரை.



# கம்பரின் இராமாவதாரம்



டாக்டர் த. அமிர்தலிங்கம் [31]

அகத்திய முனிவர் இராமபிரானைத் தங்கிடுமாறு கூறிய பஞ்சவடி, கோதாவரி ஆற்றங்கரையோரம் அமைந்திருக்கும் அழகிய ஓர் இடமாகும். சடாயு பறந்தவாறு வந்து இடத்தைக் காட்டி இராமரையும் இலக்குவனரையும்,சீதையையும் ஆசீர்வதித்துப் புறப்பட்டுச் செல்ல, இலக்குவன் தன் கைத்திறமையால், அங்கே ஒரு பர்ணசாலையை அமைத்து முடிக்கின்றான்.

மண்ணிற்கு வளம் சேர்ப்பது ஆறு. அதே மண்ணிற்கு (நாட்டிற்கு) வளம் சேர்ப்பது சான்றோர் பாட்டு. இங்கு கோதாவரி ஆற்றின் சிறப்பைப் போற்றும் கவிச்சக்கரவர்த்தி கம்பர் கோதாவரி ஆற்றிற்கும், சான்றோர் பாட்டிற்கும் சிலேடை அமைத்து பாடியிருக்கும் ஒரு பாடல் கற்பார் உள்ளத்திற்குக் களிபேருவகை நல்கிடக் கூடியதாகும்.

''புவியினுக்கு அணியாய் ஆன்ற
பொருள்தந்து புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென்
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்.''

புவியினுக்கு ஓர் ஆபரணம் போன்று அழகு தருவது, சிறந்த பொருள்கள் பலவற்றை விளைவிக்கும் வகையில் வயல்களுக்குப் பயன்படுவது, தன்னிடத்தில் பல நீர்த்துறைகளை உள்ளடக்கி, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகை நிலங்களின் வழி பரந்து செல்வது, ஒளி ஊடுருவிச் செல்லும் வகையில் தெளிவுடையதாய் குளிர்ந்த நீரோட்டத்தைக் கொண்டுவிளங்குவது கோதாவரி ஆறு, அத்தகைய கோதாவரி ஆற்றை இராம லக்குவனர்கள் கண்டார்கள் என்று ஒரு பொருள் கொள்ளும் வகையில், இப்பாடலைக் கவிச்சக்கரவர்த்தி பாடியிருக்கக் காண்கிறோம்.

புவியில் வாழும் மாந்தருக்கு அலங்காரமாவது; அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு மேலான பொருள்களை உள்ளடக்கி அறிவிற்கு விருந்தாவது, அகப்புறத்துறைகள் விரவிப் பாடப் பெறுவது, அறிவுச் சுடர்க் கொளுத்தும்படி தெளிவு கொண்டதாய் குளிர்ந்த இனிய நடையால் அமைவது சான்றோர் கவிதை. அச்சான்றோர் கவிதை போன்ற சிறப்புமிக்க கோதாவரி ஆற்றினை இராமலக்குவனர்கள் கண்டார்கள் என்று மற்றுமோர் பொருள் கொள்ளும் வகையிலும், கவிச்சக்கரவர்த்தி கம்பர் கோதாவரி ஆற்றிற்கும் சான்றோர் பாட்டிற்கும் சிலேடை நயம் அமையுமாறு இப்பாடலைப் பாடியிருக்கும்நயம் எண்ணி எண்ணி மகிழ்தற்குரிய ஒன்றாகும்.

இராமலக்குவனரையும், சீதையையும் காண்பதும் கோதாவரி ஆற்றினுக்கும் உவகை பொங்குகிறது என்றும் வருணிக்கிறார் கவிச் சக்கரவர்த்தி கம்பர். தாமரை மலர்களாகிய முகம் மலர்ந்து, குவளை மலர்களாகிய தன் விழிகளால் அவர்களை மலர நோக்கி, தன் கைகளாகிய அலைகளால் அழகிய மலர் களைத் தூவி, அவர் தம் திருவடிகளைப் பணிந்து வணங்கி வரவேற்கிறது. அந்த கோதாவரி தெய்வ ஆறு என்றும் வருணித்து

''வண்டுறை கமலச் செவ்வி
வாண்முகம் பொலிய வாசம்
உண்டுறை குவளை ஒண்கண்
ஒருங்குற நோக்கி ஊழின்
தெண்டிரைக் கரத்தின் வாரித்
திருமலர் தூவிச் செல்வர்
கண்டடி பணிவ தென்னப்
பொலிந்தக் கடவுள் யாறு''

என்று கவிச் சக்கரவர்த்தி கம்பர் பாடிப் போற்றுகிறார்.

அரியணை துறந்து ஆரண்யம் போந்த அம் மூவர் நிலைக்கு இரங்கி, நீலோற்பல மலர்களாகிய கண்கள் கண்ணீரைச் சொரிய, பெருமூச்சு விட்டு ஏக்கமும் உற்று அதே கோதாவரி யாறு அழுவது போலவும் இருக்கிறதே என்றும் வருணிக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பரின் கற்பனை நயம் செறிந்த பாடல் இது.

''எழுவுறு காத லாரின்
நிரைத் திரைத் தேங்கி ஏங்கி
பழுவநாட் குவளைச் செவ்வி
கண்பனி பரந்து சோர
வழுவிலா வாய்மை மாந்தர்
வனத்துறை வருத்தம் நோக்கி
அழுவதும் ஒத்தால் அவ்
அலங்குநீர் ஆறு மன்னோ.''

இவ்வாறு கோதாவரி ஆறு, சத்தியம் காக்க வனம் வந்துற்ற அவ்வாய்மையாளர் மூவரையும் கண்டு வருந்தியழுகிறதே தவிர அம்மூவரிடம் வனம் வந்துற்றமைக்கான வருத்தம் ஒரு சிறிதும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இராமர் சீதையிடம் ''இவ்வளவு அழகிய இடத்திலேயே நாம் வாழ்நாள் எல்லாம் இருக்க நேர்ந்தால் அது எவ்வளவு சுகமாக இருக்கும்!'' என்றும் தன் மன விருப்பத்தை வெளியிட்டு மகிழக் காண்கிறோம். பர்ண சாலையின் வெளிப்புறம் ஒரு மேடான புல்வெளியில் அமர்ந்திருந்தவாறே பஞ்சவடியின் இயற்கை எழிலை அவர்கள் இருவரும் ஏகாந்தமாகக் கண்டு ஆனந்தப் பரவசப்படுகிறார்கள்.

படுத்துறங்கும் சக்கரவாளப் பறவைகளைச் சீதைக்குக் காட்டுகிறார் இராமர். 'பரந்திருக்கும் உன் சீர்மார்பிற்கு உவமை இவை'' என்று கண்களால் கூறி இராமபிரான் குறுநகை புரிய, எதிரிருக்கும் குன்றுகளை சீதையும் இராமபிரானுக்குக் காட்டி ''உங்கள் தடமார்பிற்கு உவமை இவை'' என்பதாகக் குறுநகை புரிகிறாள். அன்னப் பறவைகள் நடந்து செல்லும் அழகினை இராமபிரான் சீதைக்குக் காட்டி, ''உன்னுடைய நடையழகிற்கு உவமை இது'' என்றுபுன்முறுவல்செய்கிறார். கோதாவரி ஆற்றில் நீர் அருந்தித் திரும்பி வரும் யானைக் கூட்டத்தை இராமருக்குக் காட்டும் சீதை ''உங்கள் பீடுமிக்க நடைக்கு இந்த மதயானைகளின் நடையை உவமை கூறலாம் அல்லவா!'' என்று புன்முறுவல் பூக்கின்றாள்.

''ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன் உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்
மாதவன் தானும் ஆண்டு
வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்.''

**கோயிற் களஞ்சிய நூல்கள் அறிமுகம்**

நூல்களின் பெயர்கள் :
(1) கோயிற்களஞ்சியம்
(2) கோயிற்களஞ்சியம்
— வடாற்காடு மாவட்டம் தொகுதி ஒன்று
(3) கோயிற் களஞ்சியம்
— வடாற்காடு மாவட்டம் தொகுதி இரண்டு
சிறப்பாசிரியர்:
கோ. மு. முத்துசாமி பிள்ளை இ.ஆ.ப. (ஒய்வு)
நூல்களின் விலை :
ஒவ்வொரு நூலும் தனித்தனியே ரூ. 80.
வெளியீடு: தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்— 613 005.

இந்நூல்களுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள தமிழகக் கல்வியமைச்சரும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்தருமான **மாண்புமிகு ஆர். எம். வீ.** அவர்கள் ''கோயிற் களஞ்சியம்'' அறிஞர் பெருமக்கள் பலர் கண்ட அரிய கனவை நனவாக்கியுள்ள அற்புத முயற்சி என்று பாராட்டியிருக்கிறார்கள்.

'சிற்பக் கலை, இசைக்கலை, நாட்டியக் கலை, ஓவியக் கலை, காவியக் கலை, அலங்காரக் கலை, பூத்தொடுக்கும் கலை, இன்னும் மடைப்பள்ளிக்கலை (சமையற்கலை) முதலான பல கலைகளை வளர்க்கும் பல்கலைக் கழகங்களே நம் பழம்பெருமை வாய்ந்த ஆலயங்கள்.''

''இவ்வாலயங்கள் முன்னாளில் அறிவுக் கண் வழங்கும் கல்வி நிலையங்களாகவும், மக்களின் வழக்குகளைத் தீர்த்து வைக்கும் நீதி மன்றங்களாகவும், நோய் தீர்க்கும் மருத்துவச் சாலைகளாகவும், வயிற்றுப் பசி தணிக்கும் அறச்சாலைகளாகவும் இன்னும் தமிழக வரலாற்றிற்கு ஆதாரமான ஆவணக் காப்பகங்களாகவும், அனைத்து மொழி கலை இலக்கிய நூல்களைக் காத்து நிற்கும் நூலகங்களாகவும் திகழ்ந்திருப்பதை வரலாறு நமக்கு வளமாகக் காட்டுகிறது.''

இவ்வாறெல்லாம், பல்கலைக் கருவூலங்களான புண்ணியத் திருக்கோயில்களின் அருமை பெருமைகளை மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு **ஆ.எம்.வீ** அவர்கள் தம் வாழ்த்துரையில் எடுத்து காட்டியிருப்பதற்கேற்பவே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டமும் இணைந்த முந்தைய வடாற்காடு மாவட்டத்தில் அமைந்து விளங்கும் 230 திருக்கோயில்களின் அரிய வரலாற்றை அற்புதப் படங்களுடன் நமக்கு மிகச் சிறப்பாகத் தொகுத்து வழங்கியிருக்கிறார் கோயிற் களஞ்சியங்களின் தொகுப்பாசிரியர் முதுபெரும்புலவர் திரு கோ.மு. முத்துசாமிப் பிள்ளை அவர்கள்.

இக்கோயிற்களஞ்சிய நூல்கள் தமிழகத் திருக்கோயில்கள் அனைத்திலும் இடம் பெறுவது மட்டுமன்றிக் கல்லூரிகள், மேனிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், நூலகங்கள் வெளிநாட்டார் நூலகங்கள் ஆகிய அனைத்திலும் இடம் பெறத் தக்க சிறப்புமிகு நூல்களே ஆகும்.

ஆற்றங்கரையோரம் காற்றில் அசைகின்ற கொடிகளை சீதையின் இடைக்கு உவன்மயாக இராமபிரான் காட்ட, குளங்களில் மலர்ந்து விளங்கும் தாமரை மலரை இராமபிரானின் முகவடிவிற்கு உவமையாகக் காட்டிச் சிரிக்கின்றாள் சீதை. இவ்வாறு பஞ்சின் அஞ்சும் மெல்லடியாள் சீதைக்கும் இராமருக்கும் பஞ்சவடி மண்ணில் அமைந்த சொர்க்கமாகவே தோன்றுகிறதே அல்லாமல் அல்லல் விளைக்கும் ஆரண்யவாசமாக அதை அவர்கள் ஒரு நாளும் உணர்ந்திடவே இல்லை. தண்டகாரண்யத்தில் அவர்கள் பத்தாண்டுக் காலம் தங்கியிருந்த போதும் ஆரண்யவாசம் அவர்களுக்கு மிக ஆனந்தமாகவே தோன்றியது. அகத்தியரின் அறிவுரைக்கு இணங்கப் பஞ்சவடிக்கு அவர்கள் வந்தும் கிட்டத்தட்ட மூன்றாண்டுக் காலம் ஆன பிறகும் ஆரண்யவாசம் அவர்களுக்கு மிக ஆனந்தவாசமாகவே இருக்கின்றது. இன்னும் அவர்களின் வனவாசம் தீர ஓராண்டுக் காலமே இருக்கிறது என்ற நிலையில்தான் அரக்கன் இராவணனுக்கு உருத்து வந்து ஊட்டும் கொடிய வல்வினை நோய் காரணமாகவும், தேவர்கள் முனிவர்கள் செய்த அருந்தவம் காரணமாகவும் அப்பஞ்சவடிக்கு வந்து சேர்கிறாள் இராவணன் தங்கையான அரக்கி சூர்ப்பணகை.

அரக்கி சூர்ப்பணகை நினைத்த இடத்திற்கு நினைத்த வேகத்தில் பறந்து செல்லக் கூடிய ஆற்றல் பெற்றவள். நினைக்கும் நேரத்தில் நினைக்கும் எந்தத் தோற்றமும் அவள் கொண்டு விடுவாள். பஞ்சவடி சூர்ப்பணகைக்கு மிக விருப்பமான இடம் ஆதலால் அவள் அடிக்கடி இங்கே வந்து தங்கி விடுவது வழக்கம். அவ்வாறு அந்த அரக்கி இம்முறை பஞ்சவடிக்குப் பறந்து வரும்போதுதான், பர்ணசாலையில் வெளிப்புறம் தனித்திருக்கும் இராமபிரான் அவள் கண்களில் பட்டு விடுகிறார்.

இராமபிரானைக் காணும் சூர்ப்பணகை அவரை மன்மதனோ என்று முதலில் ஐயுறுகிறாள். மன்மதனுக்கு ஏது உருவம்? அவன் உருவம்தான் சிவனார் நெற்றிக் கண்ணால் எரிந்து போயிற்றே! அப்படியானால் அம்மன்மதனை எரித்த சிவனார் தானோ இவர்? சிவனார் எனில் இவருக்கு நெற்றிக் கண் இருக்க வேண்டுமே! இல்லையே! ஒருவேளை இவர் தான் திருமாலோ! திருமால் எனில் நான்கு தோள்கள் இவருக்கு இல்லையே! இந்திரன் இவர்தானோ எனில் இவருக்கு ஆயிரம் விழிகள் இல்லையே! அப்படியானால் இவர் வேறு யாராகத்தான் இருக்க முடியும் என்று இராமபிரானின் வடிவழகில் ஈடுபட்டு மயங்கிக் கலக்கமுறுகின்றாள் சூர்ப்பணகை.

''சிந்தையில் உறைபவற்கு உருவம் தீய்ந்ததால்
இந்திரற்கு ஆயிரம் நயனம்; ஈசற்கு
முந்திய மலர்க்கண்ஓர் மூன்று; நான்குதோள்
உந்தியில் உலகளித்தாற் கென்று உன்னுவாள்.''

சிவனார் நெற்றிக் கண்ணால் எரிந்து போன மன்மதனே தான் இவர்! எரிந்து சாம்பலான நாள் முதலாக எண்ணற்ற காலம் தவம் புரிந்து மீண்டும் சிவனாரிடம் வேண்டித் தன் வடிவம் பெற்று அம்மன்மதனே இங்கு வந்திருத்தல் கூடும்! அதனால்தான் இத்தனை சுந்தரனாக இம்மன்மதன் விளங்குகிறான் என்று இராமபிரானை மன்மதனாகவே எண்ணி மயங்குகின்றாள் சூர்ப்பணகை.

''கற்றையஞ் சடையவன் கண்ணிற் காய்தலால்
இற்றவன் அன்று தொட்டு இறுை காறுந்தான்
நற்றவம் இயற்றியவ் அனங்கன் நல்லுருப்
பெற்றனன்ஆம்எனப்பெயர்த்தும்எண்ணுவாள்''

''அடடா! இவருடைய மணிக்கரங்கள் எத்தனை அழகாக இருக்கின்றன! கற்பகத்தினும் சிறந்த இவர் கரங்களுக்கு அட்டதிக்கு யானைகளின் துதிக்கைகளையே உவமையாகக்கூறுதல் வேண்டும். பொன்மயமான மேருமலையை விடவும்பொலிவு பெற்றுத் திகழும், இவர் வீரத் தோள்களுக்கு இந்திர நீலமலையைத்தான் உவமை கூறுதல் வேண்டும். இவருடைய திருமுகத்திற்கு வானிலவு உவமையாகுமா? எனில் அக்கறைமதி தேய்வதும் பின் வளர்வதும் ஆக அல்லவா உள்ளது! அது எப்படி இவருடைய திருமுகத்திற்கு ஈடாக முடியும்? மலர்வதும் பின் வாடுவதுமான தாமரை மலரும் இவருடைய திருமுகத்திற்கு உவமைகூறத் தக்கதன்று; இத்தனை சௌந்தரியம் கொண்டுள்ள இவர் இனியும் என்ன வேண்டித் தவம் புரிகிறாரோ தெரியவில்லையே! இவர் தவம் செய்யும்படியாக அத்தவம் முன் செய்த தவம் தான் என்ன தவமோ? இவர் திருவடிதீண்டப் பெறுவதற்கு புவிமாது செய்த தவம் தான் என்ன தவமோ? அடடா! இவருடைய திருமேனியின் ஒளி மிகுதியை என்னென்று போற்றுவேன்! இவர் மேனி ஒளிக்கு முன் கதிரவன் மேனி ஒளியும் மங்கிப் போகுதே! இவருடைய நீண்ட தோள்களையும், பரந்த மார்பினையும் ஒருங்கு பார்த்து இன்புறுவதற்கும் என் கண்கள் போதிய அளவு பெரியனவாக இல்லையே!'' என்றெல்லாம் இராமபிரானின் அழகைக் காணும் அவ்வரக்கி சூர்ப்பணகை எண்ணி எண்ணி ஏங்கி ஏங்கித் துடிக்கின்றாள். ''இம்மன்மதனின் கால்தூசிக்கு ஒப்பாகாத இந்திரனை மூவுலகு ஆள வைத்தான்; உத்தம லட்சணங்கள் அத்தனையும் அமையப் பெற்ற இவரை வனத்தில் திரிந்து அலைய வைத்தான்! என்ன பிரமன் அந்தப் பிரமன்?'' என்று படைப்புக் கடவுளாம் பிரமனைப்பழிக்கவும் செய்கிறாள் சூர்ப்பணகை.

வானில் பறந்தவாறே இராமபிரானின் வடிவழகைப் பார்த்து இவ்வாறு சொக்கிப் போகும் சூர்ப்பணகை, வையத்திற்கு இறங்கி வந்தும் மறைந்து நின்று அவரைப் பூரணமாகக் கண்டு, மையல் கொள்கிறாள். ''இத்தனை சுந்தரனைத் தழுவாவிடில், அமிர்தமே உண்டாலும் இனி என் தேகத்தில் உயிர் தங்கிடாது' என்று காமவிகாரத்தால் புழுங்கும் அச்சூர்ப்பணகை, ''கோணற்பற்களும் தொப்பை வயிறு




## டாக்டர் த. அமிர்தலிங்கம்

வருடம் ஒருநாள் வாழ்த்தும் திருநாள்
தீபத் திருநாளாம்!
உழைக்கும் மக்கள் வாழ்வில் இன்பம்
பெருக்கும் திருநாளாம்
(வருடம்)

பறவைகள் போல்நம் குழந்தைகள் உள்ளம்
களிக்கும் நன்னாளாம் — அவர்
விடியலில் எழுந்து படபட வெனவெடி
வெடித்திடும் பொன்னாளாம்
(வருடம்)

பலபல வண்ணம் புதுப்புது ஆடை
அணிந்திடும் திருநாளாம்
நலமிகு நண்பர் உறவினர் அனைவரும்
கலந்திடும் பொன்னாளாம்
(வருடம்)

தருமம் வெல்லும் பாவம் தோற்கும்
தத்துவம் உணர்வதிந்நாள்— நல்ல
கருமம் புரிந்து கடவுளை நினைந்த
நெறிதனில் நடப்பதிந்நாள்
(வருடம்)

மாக அரக்கியின் வடிவத்தோடு சென்றால் என் ஆசை நிறைவேறிடாது; அழகிய மயில் போன்ற மங்கையின் வடிவு கொண்டு செல்வேன்'' என்பதாக எண்ணித் திருமகளின் மந்திரத்தைச் செபித்து, தன்னை ஒரு சுந்தரியாக உருமாற்றிக் கொண்டு விடுகிறாள்.

செந்தாமரைப் பூவில் வாழும் திருமகளோ! வானிலிருந்து பூமிக்கு இறங்கி வரும் மின்னல் கொடியோ! இளமயிலோ! அன்னமோ! யாரோ என்று கண்டோர் வியக்கும்படியான அழகிய மங்கையின் வடிவம் கொண்டு தேனின் மொழியும், மானின் விழியும் பெற்று, தாமரைப் பாதங்களால் அடிமேல் அடிஎடுத்து வைத்து, நஞ்சினும் கொடிய அவ்வரக்கி தன் உண்மை உருவினை மறைத்து வஞ்சமகளாக இராமரிருக்கும் இடத்திற்கு வருகின்றாள் என்று வருணிக்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

''பஞ்சியொளி விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிகர் சீறடி பெயர்ப்பாள்
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென
மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்''

ஓர் அழகிய பாவை, பஞ்சும், இளம்தளிரும் போன்ற தன் தாமரைப் பூம்பாதம் வருந்துமாறு அடிமேல் அடிவைத்து நடந்து வந்தாள் என்பதை வருணிக்கும் இப்பாடலையும் பாவையின் நடைக்கொப்பாகவே சிறுசிறு மென் சொற்களைப் பெய்து யாத்திருக்கும் கவிச் சக்கரவர்த்தியின் கவித்திறம் எண்ணி எண்ணி மகிழ்ந்து இன்புறுதற்குரியது.

ஜல் ஜல் எனும் காற் சிலம்பினோசையும் மேகலாபரணத்தின் மணிகள் அசையும் ஓசையும் கேட்டு இராமபிரான் ஓசைவரும் திசையை நோக்குகிறார்; அங்கு விண்ணமுதமே ஓர் எழில் வடிவம் கொண்டு மண்ணில் இறங்கி நடை பயின்று வருகின்றதோ என்றெண்ணுமாறு கொடி இடை ஒடிய பாரமுலை தாங்கி பாவை ஒருத்தி வரக்கண்டு இராமபிரானும் யாரிவள் என்பதாகத் திகைக்கிறார். பாதலம் வாழும் நாகக்கன்னியோ, சுவர்க்கலோகத்துத் தேவகன்னியோ, அன்றி இப் பூதலம் வாழும் மானிட நங்கை தானோ? யாரிவள்? இங்கு ஏன் வருகிறாள் என்பதாக இராமபிரானின் சிந்தனைச் சுழன்றிடும் நேரம், அச்சூர்ப்பணகையும் இராமபிரானுக்கு அருகாக வந்து அவரை வணங்கும் பாவனையாகத் தன் சிவந்த இரு கைகளைக் குவிக்கின்றாள்; தன் நீண்ட கண்களாகிய வேலையும் இராமர் மேல் வீசி, மான்போல இராமபிரானை மருட்சியுற நோக்கி, அவரை நேருறக் காண்பதற்கு இயலாத வெட்கம் கொண்டவள் போல் நடித்து ஒருபுறமாக விலகி நின்று, இராமரை நோக்கிப் பார்வைக் கணையை வீசுகின்றாள் அப்பாவை.

(தொடரும்).

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம் M.A.,Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# திருக்கோயில் இதழில் விளம்பரம் செய்து பயன் அடைவீர்!

**ஆணையாளர் சுற்றறிக்கை**

அனுப்புநர்
திருமிகு சுகவனேஷ்வர், ஐ.ஏ.எஸ்.
ஆணையாளர்,
இந்து சமய அறநிலையத் துறை
119, உத்தமர் காந்தி சாலை,
சென்னை-34

பெறுநர்
அனைத்து இணை ஆணையர்/
நிர்வாக அதிகாரிகள்
அனைத்து துணை ஆணையர்/
செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர்/
செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர்/
துணை ஆணையர்.

ந.க. எண். 11834/89சி4 நாள் 21-6-91

ஐயா

பொருள்: இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை— திருக்கோயில் திங்கள் இதழ் திங்கள் தோறும் பொலிவுடன் வெளிவருவது—திருக்கோயில்களில் விளம்பரங்கள் பெறுவது விளம்பரக் கட்டணம் நிர்ணயம் செய்தல்— தொடர்பாக.

பார்வை: அரசு ஆணை எண். நிலை 242/வ.வ. & அ.நி. துறை நாள் 3— 5— 91.

பார்வைக் குறிப்பில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கும் தெய்வீக மாத இதழான திருக்கோயில் திங்கள் இதழுக்கு விளம்பரங்கள் பெறுவது தொடர்பாக கீழ்க்கண்டவாறு விளம்பரக் கட்டணம் நிர்ணயம் செய்து அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

| பக்க விபரம் | விளம்பரத் தொகை |
|---|---|
| மேல் அட்டையின் உள்பக்கம் (இரண்டாம் அட்டை) | ரூ. 750 (ரூ. எழுநூற்று ஐம்பது மட்டும்) |
| மேல் அட்டையின் கடைசி உள்பக்கம் (மூன்றாம் அட்டை) | ரூ. 500 (ரூ. ஐந்நூறு மட்டும்) |
| உட்புறம் முழுப்பக்கம் | ரூ. 450 (ரூ. நானூற்று ஐம்பது மட்டும்) |
| உட்புறம் அரைப்பக்கம் | ரூ. 300 (ரூ. முன்னூறு மட்டும்) |

மேலே குறிப்பிட்டுள்ள விபரப்படி, திருக்கோயில் திங்கள் இதழில் திருக்கோயில் நிர்வாகிகளைத் திருக்கோயில்களில் நடைபெறும் முக்கிய திருவிழாக்கள், சிறப்பு வழிபாடுகள், பூஜைக் கட்டளைகள் மற்றும் குடமுழுக்கு விழாக்கள், மாதாந்திர மற்றும் வருடாந்திர திருவிழா, நாள்காட்டி ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிடவும், துணை ஆணையர் மற்றும் உதவி ஆணையர்கள் தங்கள் நிர்வாகத்தில் உள்ள முக்கிய திருக்கோயில்களிலிருந்து மேற்கண்ட விவரப்படியான விளம்பரங்களைத் திருக்கோயில் திங்கள் இதழுக்கு அனுப்பிடவும் தகுந்த நடவடிக்கையை உடன் எடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திருக்கோயில் திங்கள் இதழுக்கான விளம்பரங்களைத் தெளிவாகத் தட்டச்சு செய்து இருபடிகளில்அனுப்பவும், விளம்பரக் கட்டணத்தை ஆணையரின் பதவிப் பெயருக்குக் கேட்புக் காசோலை (Demand Draft) எடுத்து அனுப்பவும், விளம்பரங்களை அனுப்பும் உறையின் மீது ''திருக்கோயில் திங்கள் இதழ் விளம்பரம்'' என எழுதி அனுப்பிடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. விளம்பரங்களை வெளியிட குறைந்தது 15 தினங்களுக்கு முன்கூட்டி விவரங்களை அனுப்பி வைக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அனைத்து துணை ஆணையர்/உதவி ஆணையர்கள் தங்கள் சரகத்தில் உள்ள அனைத்துத் திருக்கோயில் நிர்வாகிகளுக்கும் மேற்படி விபரங்களை சுற்றறிக்கை மூலம் தெரிவித்து விளம்பரங்களை அனுப்பி துரித நடவடிக்கை எடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம். ஆணையாளர்



# "மாண்புமிகு முதலமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி"

வருமானம் இல்லாத கோவில்களில் வழிபாடு நடத்துவதற்காகவும் பராமரிக்கவும் "முதல் அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை **மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் அமைத்துள்ளார்கள். இதற்கு முதல் நன்கொடையாக 1 லட்சத்து 8 ரூபாயை அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.

இது குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் **புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழ்நாடு பழம்பெரும் கோவில்களின் உறைவிடம் ஆகும். ஆனால் ஆயிரக்கணக்கான சிறு கோவில்கள் சிதைந்த நிலையில் உள்ளன.

அவைகளில் பெரும்பாலானவற்றில் பல்லாண்டுக் காலமாக திருப்பணி வேலைகள் நடத்தப்படவில்லை. மேலும் பல கோவில்கள் அன்றாட வழிபாடுகூட நடத்த முடியாத வறிய நிலையில் உள்ளன.

இப்படிப்பட்ட கோவில்களுக்கு எந்த வகையில் நம்மால் உதவ முடியும் என்று நான் சிந்தித்து வந்தேன். இந்தக் கோவில்களுக்குத் திருப்பணி செய்யவும் அவற்றைப் பராமரிக்கவும் பெருந்தொகை தேவைப்படுகிறது.

இந்தச் சீரிய பணிக்கு பொது மக்களிடம் இருந்து நன்கொடையாக பொருளுதவி பெறுவது விரும்பத்தக்கதாக இருக்கும் என நான் கருதுகிறேன்

இதன் அடிப்படையில் "முதல் அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" என்ற நிதியை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு தீர்மானித்து உள்ளது.

இந்த நிதிக்கு கொடை உள்ளம் படைத்தோர், தொழில் அதிபர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் நன்கொடை வழங்கலாம்.

சீரமைப்பு தேவைப்படும் சிறு கோவில்களில் திருப்பணியினை மேற்கொள்ளவும், அவைகளை நல்ல நிலையில் பராமரிக்கவும் இந்நிதி பயன்படுத்தப்படும்.

இந்நிதியில் இருந்து உதவிகோரும் கோவில்களுக்கு நிதி வழங்கும் அதிகாரம் பெற்றவர் தமிழ்நாடு முதல் அமைச்சர் ஆவார்.

அவ்வாறு உதவிபெறும் கோவில்களில் இந்தத் தொகை முறையாக பயன்படுத்தப் பட்டதா என்பதை சரிபார்க்கும் அதிகாரம் பெற்றவராக அரசின் வணிக வரி மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் அல்லது இதற்கென முதல் அமைச்சரால் அங்கீகரிக்கப்படும் அலுவலர் செயல்படுவார்.

இந்த நிதிக்கு முதல் நன்கொடையாக நான் 1 லட்சத்து 8 ரூபாய் வழங்கி உள்ளேன்.

இந்த நன்கொடையோடு முதல் அமைச்சரின் கோவில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி தொடங்கப்படுகிறது.

இந்தச் சீரிய பணிக்கு தாராளமாக நன்கொடை வழங்குமாறு கொடையுள்ளம் கொண்டோரையும், தொழிலதிபர்களையும், பொதுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்".

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் **புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் கூறியுள்ளார்கள்.